ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி எ. பிரமோதூதஹு ஆவணிமீ பகுதி அ.
Vol 7. August & September 1930. **No. 8.**

குருகுலவாஸம்.

அறிவிற்சிறந்த பெரியார்கள் இளமை, யாக்கை (சரீரம்) செல்வம் முதலிய அனைத்தும் நிலையற்றனவெனக் கருதி நிலையுடையதி யாது? என்று ஆராய்வதற்கு குருகுலவாஸஞ்செய்து பெரும்பாலும் தம் வாழ்நாளைக் குருவின் பணிவிடையிற் கழித்துப் பிர்ம்ம வித்தையைத்தெரிந்து கடைத்தேறினார்கள். * "அறுநான்கிரட்டி யிளமை நல்லியாண்டு, ஆறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை, மூன்றுவகைக் குறித்தமுத்தீச் செல்வத்து, இருபிறப்பாளர்....." என்றதனால் நாற்பத்தெட்டு வயதுவரை பிர்ம்மசரியங்காத்துக் குருகுலவாஸஞ்செய்தார்களென்பதும், § உத்தாலகர் முதலான மெய்யறிஞர் குருகுலவாஸஞ்செய்து பிர்ம்மவித்தையை அறிந்தார்களென்பதும் நன்கறியலாம்.

---

* (இதன் பொருள்) "இருபத்துநான்கின் இரட்டியாகிய நாற்பத்தெட்டியாண்டு நல்லிளமையை வேதங்கூறிய நெறியிலேபோக்கிய, அறத்தை எப்பொழுதுங் கூறுங்கோட்பாட்டினையும், நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவுமாகிய மூன்று வகையைக்கருதின ஆகவனீயம் தக்கிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று தீயாலுண்டாகிய செல்வத்தினையுமுடைய, உபநயனத்துக்கு முன்பு ஒரு பிறப்பும் பின்பு ஒரு பிறப்புமாகிய இருபிறப்பினையுமுடைய அந்தணர்" என்பதாம்.

§ உத்தாலகர் என்பவர் அருணரென்ற மஹாருஷியின் புதல்வர், சுவேதகேதுவின் பிதா. இவர் தௌம்யர் என்ற மஹாருஷியை ஆசார்யராக

அஜ்ஞானமாகிய இருட்டைத் தன் ஞானவொளியால் அகற்றுகின்றவனே குருவாவான். உடற்பிறப்பை யுண்டுபண்ணுகின்ற தாய்தந்தையர்களைப்போல, குருவும் ஞான ஜென்மத்தை யுண்டுபண்ணுகின்றான். உடற்பிறப்பைக்காட்டிலும் ஞானஜன்மம் சிறந்ததென்பர். இதனை, ‡ "𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑌾𑌚𑌿𑌨𑍋𑌤𑌿 𑌸 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌨 𑌦𑍍𑌰𑍁𑌹𑍍𑌯𑍇𑌤𑍍 𑌕𑌦𑌾𑌚𑌨 𑌸 𑌹𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌸𑍍𑌤𑌂 𑌜𑌨𑌯𑌤𑌿 𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌶𑌰𑍀𑌰𑌮𑍇𑌵 𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑌰𑍌 𑌜𑌨𑌯𑌤𑌃" "யஸ்மாத் தர்மா நாசிநோதி ஸஆசார்ய: தஸ்மை நத்ருஹ்யேத் கதாசந ஸஹி வித்யாத ஸ்தம்ஜநயதி தச்சரேஷ்டம் ஜந்ம சரீரமேவ மாதா பிதரௌ ஜநயத:" என்ற மேற்கோளா லறியலாம்.

உண்மை நெறியை ஆசார்யனிடத்தன்றி வேறுவழியாக அறியவொண்ணாதென்பதை உலகினருக்கு நன்கு புலப்படுத்துவதற்காகவே ஸர்வேச்வரன் வதரியாச்சிரமத்தில் "தானே சிஷ்யனுமாசார்யனுமாய் நின்று திருமந்திரத்தை வெளியிட்டான்".

வரிதுப் பணிவிடைகள் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் தௌம்யர் இவரை வயலில் நீர்பாய்ச்சி வருமாறு நியமித்தார். இவர் வயலிற் சென்று ஜலத்தைப் பூரித்து அது வெளியேறுதிருக்கும்படி செய்தற்குப் பல உபாயங்கள் செய்தும் பயன்படாதொழியப் பின்னர் தாமே அந்த வயலின் மடை வாயிலிற் படுத்துக்கொண்டு ஜலத்தைத் தடுத்தனர். இவர் இங்ஙனமிருக்க, தௌம்யர் இவர் நெடுநேரம் வாராதிருந்தமை கண்டு புறப்பட்டு வயலருகே வந்து இவரை அழைத்தனர். இவரும் மடைவாயைப் பேதித்துக் கொண்டு ஆசார்யரைக்கிட்டிநின்று நிகழ்ந்ததைத் தெரிவித்தனர். தௌம்யர் இவரது செயலுக்கு வியந்து மகிழ்வுற்று இவர் வயலின் மடைவாயிலைப் பேதித்துக்கொண்டு வந்தகாரணத்தான் உத்தாலகர் என்ற பெயரிட்டு, ஸகல சாஸ்திரங்களும் இவரது ஞானத்திற்கு நன்கு விஷயமாகும்படி ஆசீர்வதித்து விடை கொடுத்தனுப்பினர்.

‡ (இதன்பொருள்) யஸ்மாத்—யாதொரு காரணத்தால், தர்மாந்—விதிக்கப்பட்டகர்மங்களை, ஆசிநோதி—அநுஷ்டிக்கிறானோ, ஸ:- (அக்காரணத்தால்) அவன், ஆசார்ய:-ஆசார்யன், தஸ்மை—அந்த ஆசார்யன்பொருட்டு, கதாசன—எப்பொழுதும், நத்ருஹ்யேத்—துரோஹம் செய்யக்கடவேனல்லேன், ஸஹி—அந்த ஆசார்யன், தம்—அந்தச சிஷ்யனை, வித்யாத:-வித்யையால், ஜநயதி—உண்டாக்குகிறான், தத்ஜன்மம்—அந்த வித்யாஜன்மமானது, சிரேஷ்டம்—சிறந்தது, மாதாபிதரௌ—தாய்தந்தையர், சரீரமேவ—தேகத்தை மாத்திரம், ஜநயத:—உண்டுபண்ணுகிறார்; என்பதாம்.

மேலும், ஸர்வேசுவரன் இராமபிரானக வந்தவதரித்தகாலத்தில் வஸிஷ்டர் விசுவாமித்ரர் அகஸ்தியர் முதலானவர்களை ஆசார்யர்களாக அங்கீகரித்து வித்தைகளைப் பயின்றான். கிருஷ்ணாவதாரத்தில் தானும் பலபத்திரனுமாக சாந்தீபினி என்ற ஆசார்யனையடைந்து அடியோங்கட்கு எல்லா வித்தைகளையும் உபதேசித்தருளவேண்டுமென்று வேண்டிநின்றனர். அப்பொழுது சாந்தீபினி இவர்கட்கு நான்கு வேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும், சகல உபநிடதங்களையும், பிரயோகசாஸ்திரங்களையும், உபசம்மார சாஸ்திரங்களையும், இராஜநீதிகளையும் ஒருமுறை உபதேசிக்க அவற்றையெல்லாங் கற்றுணர்ந்தார்கள்.

பின்னர் இராமகிருஷ்ணர்கள் தம் ஆசார்யரைநோக்கி 'ஸ்வாமீ! தேவரீர் அநுக்ரஹத்தால் எல்லாக் கலைகளையுங் கற்றுணர்ந்தோம்; இனி நாங்கள் செய்யத்தக்க கடமைகளைசசெய்ய விரும்புகிறோமாதலால் தேவரீர் திருவுள்ளக்கருத்தை அருளிச்செய்யவேண்டு' மென்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது சாந்தீபினி இவர்களுடைய முகத்தை நன்றாக உற்றுநோக்கி, 'இவர்கள் ஜகதீசுவரர்களாவார்கள்' என்று நிச்சயித்து, இவர்களை நோக்கி 'எனது புத்திரன் பிரபாகதீர்த்தத்தில் மரணமடைந்தான்; அன்றுமுதல் மிகுந்த கவலையுடையவனாகவிருக்கிறேன்; அவனைக்கொண்டுவந்து கொடுப்பதே குருதக்ஷிணையாகும்' என்றுரைத்தனர்.

இவ்வுரைகேட்ட இராமகிருஷ்ணர்கள் 'அப்படியே செய்கிறோம்'என்று இரதத்தின்மீதேறி, பிரபாகதீர்த்தக்கரையை அடைந்தனர். இவர்கள் வரவை அறிந்த வருணன் அதிவேகத்துடன் ஓடி வந்து அர்க்யபாத்யாதிகளால் உபசரித்துக் கைகுவித்துக் கொண்டு நின்றனன். கண்ணபிரான் வருணனை நோக்கி, 'முன்பு இந்தப் பிரபாகதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யவந்த சாந்தீபினியின் புதல்வன் உயிர் நீத்தான். அவன் என்னுடைய ஆசார்ய புத்திரனாதலால் அவனை இப்பொழுதே அழைத்துக்கொண்டுபோய் குருதக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். ஆகையால் விரைவில் கொண்டு வந்து சேர்ப்பாய்' என்றனர். அதுகேட்ட வருணன் 'ஸ்வாமீ! தேவரீருடைய ஆசார்ய புத்திரனை இவ்விடத்தில் எங்குங்காணேன்; சமுத்திரத்தில் சங்கு வடிவாயிருக்கிற பஞ்சஜன் என்கிற அசுரன்

அவனைக் கொன்றனன்; அவனைக் கொல்வதற்கு அடியேனுக்குச் சக்தியில்லை; தேவரீரே அவனைப போக்கவேண்டும்' என்றனன்.

அதைக்கேட்ட கண்ணபிரான் பலராமரை இரதத்திலிருக்கும்படி சொல்லிவிட்டுச் சமுத்திரத்திற் புகுந்து அந்தப் பஞ்சஜனைச் சங்கரித்து அவனுடலைப் பரிசோதித்தனர். தமது ஆசார்யன் புத்திரன் காணுதொழிய, அந்தப் பஞ்சஜனுடைய சரீரமாகிய சங்கை யெடுத்துக்கொண்டு பலபத்திரருடன் இரதத்தின் மீதேறி யமபுரஞ்சென்று பாஞ்சஜன்யத் தொனியை யெழுப்பினர். அத்தொனியைக்கேட்ட யமதருமன் விரைந்து வந்து உபசரித்து வணங்கிநின்று 'தேவரீர்கள் யாதுகாரணம்பற்றி இங்கெழுந்தருளினீர்கள்; நியமிக்கவேண்டும்' என்று தாழ்மையுடன் வினவினன்.

கண்ணபிரான், 'யமதரும! எமது குருவின் புதல்வன் முன்பு கர்மவசத்தால் மரணமடைந்திருந்தாலும், இப்பொழுது எம்முடைய அநுக்ரஹ விசேஷத்தால் பிழைத்திருப்பான்; அவனை விரைவில் இங்கு அழைத்து வருவாய்' என்று ஆக்ஞாபித்தனர். யமதருமனும் அவ்வாக்ஞையைச் சிரசாகவஹித்து அந்தப் புதலவனை அழைத்துக்கொண்டுவந்துவிட்டான். அவனை இரதத்தின் மீதேற்றிக் கொண்டு சாந்தீபினிபாற்சென்று அவரைப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து 'ஸ்வாமீ! தேவரீருடைய அநுக்ரஹத்தால் பிரபாக தீர்த்தத்தில் உயிர்நீத்த புத்திரனைக் கொண்டுவந்தோம்; தக்ஷிணையாக அங்கீகரித்தருள வேண்டும்; மேலும் ஏதேனும் வேண்டுமென்று திருவுள்ளம்பற்றினும் அங்ஙனமே செய்கிறோம்' என்றனர். அப்பொழுது சாந்தீபினி, 'உயிர்நீத்த எனது புதல்வனைக் கொண்டுவந்து கொடுத்த இப்பேருபகாரமே போதுமானது; இத்தகைய உபகாரம் பிறர்களாற்செய்யற்பாலதோ? உங்கட்குக் கீர்த்தியும் நன்மையும் ஆரோக்யமு முண்டாக வேண்டும்' என்று ஆசீர்வதித்துப் 'போய்வருவீர்கள்' என்று விடையளித்தனர். இதனை,

"மாதவத்தோன்புத்திரன்போய்மறிகடல்வாய்மாண்டானை
ஓதுவித்ததக்கிணையாவுருவுருவேகொடுத்தானூர்
தோதவத்தித்தூய்மறையோர்துறைபடியததுளும்பியெங்கும்
போதில்வைத்ததேன்சொரியும்புனலரங்கமென்பதுவே"

என்று பெரியாழ்வாரருளிச் செயலானு மறியலாம்.

எல்லா வேதவேதாந்தங்களும் ஸர்வேசுவரனைக் குறித்தே பேசுகின்றன. அவனே எல்லாமறிந்தவன். ஒருவர்பாற்சென்று ஏதேனும் கேட்டுத் தெளிய வேண்டுமென்ற குறைபாடுடையவனல்லன். இத்தகையவன் அவதரித்த காலங்களில் ஆசார்யனையடைந்து ஸகலார்த்தங்களையுங் கேட்டுக் குருதக்ஷிணையுங் கொடுத்தானென்பனவெல்லாம் பிறரை இங்ஙனம் செய்விக்கவேண்டுமென்ற கருத்துக்கொண்டனவாம். இதனுன் அறிவொழுக்கங்களிற் சிறந்த உத்தமாசார்யரை யடைந்து உண்மையறிய வேண்டியது யாவர்க்குமின்றியமையாத தொன்றுமென்பது தெளிவாயிற்று.

ப. அ.

ஸ்ரீ:

அத்யவஸாயத்தின் பெருமை.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(168-ம் பக்கத்தொடர்ச்சி.)

துருவன் என்பவன் உத்தானபாதன் என்ற அரசனுடைய மூத்த மனைவியின் வயிற்றிற் பிறந்தவன். இவ்வரசனுக்கு இளைய மனைவியிடம் மிகுந்த விருப்பமுண்டு. அவள் வயிற்றிலும் ஒரு புதல்வன் பிறந்தான். அவன் பெயர் உத்தமனென்பது. ஒருநாள் அரசன்மடியின்மீது உத்தமனிருப்பதைக்கண்ட துருவனும்அவன் மடியின்மீதமர்ந்தான். இதைக்கண்ட உத்தமன் அன்னை பொறாமையுற்றுத் துருவனை நோக்கி, 'அடாபயலே! நீ என் வயிற்றிற் பிறக்கும் பாக்யமில்லாத் பாபியன்றோ' அப்படியிருக்க நீ என்னருமைப்புதல்வன் உத்தமனுக்குச் சமமாக அரசன் மடியிலிருக்கின்றனையே; இவ்விருப்பு உனக்குத்தகுமோ' என்று செவிசுடும்படியுரைத்தாள். துருவன் இந்தத் துன்புறுத்தும் மொழிகளைக்கேட்டு ஆற்றொணுத் துயரங்கொண்டு, காட்டையடைந்து ஆங்குள்ள பெரியாரிடத்தில் நிருபாதிக பிதாவான எம்பெருமானை ஆராதிக்கும் முறையினைக் கேட்டுத்தெரிந்து அரிய தவம் புரிந்தான். இவனு

டைய சிறந்த தபசுக்கு வியந்து ஸர்வேசுவரன் ப்ரத்யக்ஷமாகி, இது வரையிலும் ஒருவரும் பெற்றிராததாய், துருவபத மென்னும் தன் பெயராலே வழங்கத்தக்கதாய், நாட்டிற்குக் கண்காட்டியாய், பக லிரவுகளை நடத்திக்கொண்டு செல்கிற சூர்ய சந்திரன் முதலிய ஜயோதிச் சக்கரமியங்குதற்குக் காரணமாயிருக்கிற சிறந்த ஸ்தா னத்தை யருளினன்.

துருவன் ஐந்தாவது வயதில் காடுசென்று அரியதவஞ்செய்து ஆறு மாதத்திற்குள் ஸர்வேசுவரனை ப்ரத்யக்ஷமாக்கிப் பெறுதற் கரிய பதவியைப் பெற்றதாகப் புராணங்களிற் சொல்லப்பட்டுளது.

இது நிற்க; இந்நாளில் விசுவாமித்திரர் என்று கொண்டாடப் படுகிற மஹரிஷி என்பவர் முற்காலத்தில் அரசனாகவிருந்து ஆட்சி செய்து கொண்டிருந்தபோது காட்டிற்கு வேட்டையாடச்சென்று வசிஷ்டர் ஆசிரமம சார்ந்தனர். அப்பொழுது வஸிஷ்டர் காம தேனுக்கு ஆணையிட அதுவும் விசுவாமித்திரரை விசேஷமாக ஆரா தித்தது. அந்தக் காமதேனுவின் பெருமையையறிந்த விசுவாமித்தி ரர் அந்தக் காமதேனுவைத் தாமடைய இச்சைகொண்டு வஸிஷ் டரை வேண்டிநின்றும் படையுடனெதிர்த்தும் பயன் படாமை கண்டு, ப்ராஹ்மண்யமே உயர்ந்ததெனக்கருதி, அந்த ப்ராஹ்மண் யத்தையடையப பேராசைகொண்டு நீண்டகாலம் தவம்செய்து தம் இஷ்டஸித்தி பெற்றதாகப் புராணக்கூறக் கேட்டுளோம். இனி, துருவன் விசுவாமித்திரா என்ற இவ்விருவரின் நிலைமையை ஆராய் வோம்.—

அறிவிலும் வயதிலும் இறுவனுகிய துருவன் எவருமடையப் பெறுத அரிய பெரிய பலனை மிகக்குறைந்த காலத்திலடைந்தான். அறிவிலும் வயதிலும் அநுபவத்திலும் சிறந்த விசுவாமித்திரர் ஸர்வ ஸாதாரணமான பராஹ்மண்யத்தைப் பெறுவதற்கு நீண்டகாலம் முயன்று பரிபவப்பட்டு மனக்கவலையுற்றுப் படாதபாடு பட்டார். இவ்விருவரில் எவ்வகையானும் சிறியவனுகிய துருவன் அரியபெரிய பலனைக் காலவிளம்பமின்றி எளிதிற் பெற்றதற்கும், எவ்வகையா னும் சிறந்தவராகிய விசுவாமித்திரர் ஸாதாரணமாகிய ஒருபலனைக் கால விளம்பத்தோடு அரிதிற்பெற்றதற்கும் காரணம் யாதென

ஆராயவேண்டுமாகில் உபாயாநுஷ்டானத்தில இவ்விருவருக்கு முண்டாகிய அத்யவஸாயத்தின் தாரதம்யமே இவற்றிற்குக்காரண மாகுமென்பது விளங்கும்.

துருவனுடைய மனவுறுதி அவிசால்யம் (கலக்க அரிது) அவன் தவஞ்செய்கிறபோது சிலநாள் வலது காலினாலும், சிலநாள் இடது காலினாலும் இரண்டு கட்டைவிரலினாலும் நின்று தவஞ் செய்தான். அப்பொழுது பூமி பாரந்தாங்கமாட்டாமல் ஆழ்ந்து நெளிந்து தத்தளித்ததாகச் சொல்லப்பட்டுளது. ஐந்து வயதுள்ள இச்சிறுவன் கனத்தை பூமிதாங்காமைக்கு இவன் மனவுறுதியின் கனமன்றோ காரணமாக வேண்டும். இவன் தவம் புரிந்த சிலநாளில் தேவர்கள் நடுங்கினார்கள்; இவனுடைய மனத்தின் உறுதியை ஒழிப்பதற்கு அவனது அன்னைவடிவைத்தாங்கி வந்து என் கண்ணே! மணியே! தெள்ளமுதே! நீ மண்ணில் செம்பொடியாடி என் மார்பில மன்னிடப்பெற்ற இந்நாளில காட்டிலிருநது கடுந்தவம் புரிவது தகுதியோவென அவன் மனமிரங்கும்படி கண்ணீர் விட்டுக்கதறி அழுது பார்த்தனர். மேலும பேயுருக்கொண்டு பயமுறுத்தினர். இவர்கள் முயற்சி பயனற்றன. வெளியில்நடக்கும் விஷயங்களனைத்தும் அவன் கண்ணிற்கும் நெஞ்சிற்கும் புலனாகவில்லை. நிமிர்ந்து மலர்ந்த தன் ஹ்ருதயகமலத்தில், ஊன்றியிட்ட அடியிணையும், கருத்து நெய்த்து மழைமுகில்போன்ற திருமேனியழகும், அவ்வழகு விளங்கத் திருவரைபூத்ததுபோலப பொற்பட்டாடையும், திருமார்பில் திருவும், மறுவும், புன்முறுவலும், கரியவாகிப் புடைபரந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய தண்டாமரைக் கண்களும், கரியதிருக்குழலும், தாழ்ந்த திருமுகமும், கவிந்தமுடியும் தாழ்ந்த மகர நெடுங்குழைக்காதுகளும், திவ்யாயுதங்களேந்திய வைத்தஞ்சலென்ற முறைகொண்டதொரு திருக்கையும் என்ற அவயவங்களோடு கூடிய எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹமே தியானத்திற்கு விஷயமாயிருந்ததேயன்றிப பிறிதொன்றுமில்லை.

விசுவாமித்திரருக்குத் துருவனிடத்திலுள்ள மனவுறுதி சிறிதேனுமில்லை. இவரைப் பலரும் படியாக ஏமாற்றினார்கள். இவருக்குக் காமக் குரோதங்களையுண்டாக்கி இவரது தவத்தை யழித்தார்

கள். அக்காலத்திலே மேநகை வயிற்றில் சகுந்தலை பிறந்ததும், ரம்பையின் சாபமும், திரிசங்கு சுரக்ஷேப விருத்தாந்தங்களும் நிகழ்ந்தன. ஆகையால் துருவனுடைய அத்யவஸாயத்துக்கும், விசுவாமித்திரருடைய அத்யவஸாயத்துக்கும் நெடுவாசியுண்டு. இதனுன் அத்யவஸாயத்தின் வலிமையும், இஃதின்மையும் பலஸித்தி விரைவில் கிடைப்பதற்கும் கிடையாமைக்கும் காரணமாகுமென்பது தெளிவாயிற்று.

இனி, ஒரு பலத்தைக்குறித்து ஒரு தர்மத்தை யநுஷ்டிக்கப் புகுந்தவர்களுக்குண்டான பிரயோஜனத்தின் தாரதம்யத்தினுல் அத்யவஸாயத்தின் பெருமையை விளக்கப் பதிவிரதைகளின் சரித்திரம் ஆராயப்படும்.—

அருந்தவத்தினுல் அனலிற் பிறந்து அருமையாக வளர்ந்த திரௌபதையின் பெருமையை நோக்குவோம். இவளுக்காகத் தனித்து ஐவரையும் மணக்கலாமபடி சாஸ்திரம் விதித்தது. இவள் அனலிற்பிறந்ததும் பெருமை விளக்கும். பர்த்தாவினுடைய அபிப்பிராயத்தைப் பின்பற்றி நடக்கவேண்டியதே எல்லாப் பதிவிரதைகட்கும் முக்ய தர்மமாயிருந்தாலும் ஐவருடைய அபிப்பிராயத்தை அநுஸரித்து நடக்கவேண்டிய அருமைப்பாடு இவளொருத்திக்கேயுளது. துருபதன் என்ற அரசன் பெருங்கூட்டத்தையுடையவன். அவனுக்கு அருமையாகப் பிறந்தவள். நாடாளும மன்னர் ஐவருக்குப் பத்தினியாயிருந்து, அவர்கள் திக்விஜயம் செய்து ராஜஸூயஞ்செய்துகொள்ளவும் பெருமையெல்லாமடையப்பெற்றவள். ஸுயோதனுதியர் பொய்சூதில் தர்மபுத்திரரைசசெயித்து இவளையும் பந்தயமாக வைக்கச்செய்து வசமாக்கி, நாடெங்கும் கண்டதும் கேட்டதுமில்லாத முறையில் இவளைப் பரிபவப்படுத்த அத்துடன் தன் பர்த்தாக்களோடு காடுசென்று கஷ்டங்களெல்லாம் வஹித்தாள். மேலும் மறைந்து வஸிக்க வேண்டிய காலத்தில் தன்னிற் குறைந்த தன்மையுடைய ஸ்த்ரீக்கு இழிதொழில் செய்து பின்பு கீசகன் காலினுல் ஸபை நடுவே உதைக்கப்பட்டாள். இப்படி பர்த்தாக்களுடன் தானுமிசைந்து பரிபவப்பட்டதெல்லாம் பாதிவ்ருத்ய தர்மம் பெரிதென்று துணிவுகொண்டு அவர்கள் அபிப்பிராயத்தைப் பின்பற்றிச் சென்ற முறையால் நேர்ந்தவையாகும்.

பார்த்தாக்கள் இந்திரப்ரஸ்தத்தில் தன்னைப் பெருமைப்பட வைத்ததும், பின்பு காட்டில் பலராலும் பரிபவப்படும்படி செய்ததும் இவளுக்கு ஒரே படியாயிருந்ததே யொழியவேறில்லை. அதனாலடைந்த பெருமை உரைப்பதற்கு எளிதன்று. இவள் ஸுயோதனாதியர்களால் பரிபவப்பட்டகாலத்தில அவர்கள் விஷயமாக இவள் பிரதிஜ்ஞைசெய்து தன் கூந்தலை விரித்தனள். இங்ஙனம் விரித்த இவளுடைய பிரதிஜ்ஞையையும் நிறைவேற்றிக் குழலையுமுடிப்பிக்க வேதாந்தவேத்யமானதொரு பரதத்வம் இவளுக்குக் கையாளாய், இவளுக்காக அர்ஜுனனுக்குச் ஸாரத்யஸாரத்யங்கள் செய்தும் 'உன்னுடைய மனோரதத்தை முடித்துவைக்கின்றேன்; நீ நம்புவாய்' என்று உறுதிமொழி கூறியும், பகலையிரவாக்கியும் படாதபாடு பட்டதெல்லாம் உரைக்கலாகுமோ?

இன்னும், விராடநகர சபிபத்தில பாண்டவர்கள விடுதி கொண்டிருந்தகாலத்தில் கிருஷ்ணார்ஜுனர்கள ஏகாந்தமாயிருந்த முறைமையை ஸஞ்சயன் கண்டு மயங்கியதாக ரிஷி கூறியிருக்கின்றார். அஃதாவது ஸத்யாபாமை மடியில கண்ணன் திருமுடியைச் சாய்த்து அர்ஜுனன் மடியில திருவடிகளை நீட்டி வருடிவிக்கவும், அர்ஜுனன் அடிகள், பக்கத்திலிருந்த பாஞ்சாலியின் மடியில் கிடக்கவும் ஸஞ்சயன்கண்டு, இஃதொருமைத்திரி (ஸ்நேகத்தன்மை) இருந்தபடி யென்?' என்று வியப்புற்று, 'இனிக் கௌரவகுலம் வேரற்றது' என்று உறுதிகொண்டு த்ருதராஷ்டனிடம் சென்று அவன் நெஞ்சிடிந்துகும்படி யுரைத்தானென்பதாம்.

இபபடி இந்நால்வரும் ஒரு படுக்கையிலிருக்க நேருவது நிகழத்தக்கதொன்றோ! புண்யபாப கர்மங்களை அடியோடொழித்து விரஜையில் முழுகி விண்ணுட்டிற் சென்றபோது பர்யங்க வித்தையில் நேரக்கூடிய முறைமையை நினைப்பூட்டுகிறதல்லவா? "அஹோ ஹாஸ்யம் அஹோஹாஸ்யம் யதித்ரம் ஸாரோதகம் ஸாருணம் ஸுஹ ஸநாதநம்" "அஹோபாக்யம் அஹோபாக்யம் மம்மித்ரம் பரமாநந்தம் பூர்ணம் ப்ரஹ்மஸநாதநம்" என்று கொண்டாடும்படி பரதத்வத்தைத் தோழமைகொண்டமுறை த்ரௌபதிக்கு வாய்த்தது போல பிறர்க்கு வாய்க்கற்பாலதோ. 'ஸ்திரீகளுக்குண்டாகும் பெரு

மையெல்லாம் பாதிவ்ருத்ய தர்மத்தாலாகுமாகையிலே த்ரௌபதியின் பாதிவிருத்யமும், அவள் பெருமையும் வியக்கத்தக்கன.

இனி, தமயந்தியினுடைய நிலைமையை ஆராய்வோம். தமயந்தி என்பவள் விதர்ப்பதேசாதிபாகிய வீமராஜன் புதல்வி. இவள் ஒருநாள் பூக்கொய்வதற்கு உத்யானவனஞ்சென்றபோது நிஷததேசத்து மன்னனான நளனால் அனுப்பப்பட்ட சில அன்னங்கள் அவளுடன் வார்த்தையாடி நளனுடைய பெருமையைப் பேசக்கேட்டு, அவனிடத்திற் காதல் கொண்டிருந்தாள். இவள் கருத்தறிந்த பீமராஜன் அவளுக்கு ஸ்வயம்வர நாளிட்டான். இதனைக் கேள்வியுற்ற நளன் புறப்பட்டு வருகிறவழியில், தமயந்தியின் பெருமையையும், பேரழகையும் கேள்வியுற்று மணந்துகொள்ள வேண்டும் என்ற கருத்துடைய இந்திரன் யமன் அக்கினி வருணன் என்ற இந்நால்வரும் சந்தித்தனர். இவர்கள் 'நளனைக்கொண்டே தமயந்தியை நமக்கிசையும்படி செய்யவேண்டும்' என்று கருதி நளனைப் பிறரறியாவண்ணம் தமயந்தியின் அந்தப்புரத்திற் கனுப்பினார்கள். நளன் தமயந்தியை அணுகின்று, 'நான் இப்பொழுது இந்திராதியர்க்குத் தூதாகவந்தேன்; நீ அவர்களில் எவரையேனும் வரிப்பாய்' என்றுரையாடினான். அதற்கவள் 'உண்மையே விரும்பிய நெஞ்சுடைய நான் தேவர்களேயனும் அவர்களை ஒருபோதும் விரும்பேன்' என்று வெறுத்துக்கூறினாள். இதனை நளன் இந்திராதியரிடம் வந்தறிவித்தனன். இந்திராதியர் 'நளனுருக்கொண்டு தமயந்தியை ஏமாற்றிவிடவேண்டும்' என்று நளனுடைய வடிவைத்தாங்கிக்கொண்டு ஸ்வயம்வர மண்டபத்திற் புகுந்தனர். வரிக்கவந்த தமயந்தி ஐந்து நளன் நிற்கக் கண்டு கலக்கமுற்று 'நான் பாதிவ்ருத்ய தர்மத்தில் ஊற்றமுடையவளாயிருப்பது உண்மையானால் தேவர்கள் சூழ்ச்சியினின்றும் மீண்டு உண்மை நளன் என் கண்ணிற்குப் புலப்படவேண்டும்' என்று கூறினள். அப்பொழுது இந்திராதியர் தாம் கொண்ட எண்ணத்திற்குமாறாகத் தமமையறியாமல் பூமியிற் கால்படாமலும், கண்ணிமைபடாமலும் வாடப்பெறாத செவ்வியமாலையுடனும் நின்றனர். இவர்கள் நடுவில் நளன் பூமியிற்பாவிய கால்களும் இமைத்த கண்களும் சூடிவாடப்பெற்ற மாலையுமுடையனாய் நின்றான். அப்பொழுது தமயந்தி சந்தேகம் நீங்கப்பெற்று நளனை வரித்தாள்.

பின்னர்த் தமயந்தி நளனோடு நாட்டையடைந்து வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் நளன் புஷ்கரனென்ற அரசனுடன் சூதாடித் தோல்வியுற்று நாட்டைத் துறந்து காட்டையணுகிய போது தமயந்தியும் தொடர்ந்து வந்தாள். பின்பு நளனுடைய வஞ்சனையால் தமயந்தி நளனைவிட்டுப் பிரிந்து வருத்தமுற்று அலைந்து திரிந்துகொண்டிருக்கிற காலத்தில் ஒரு வேடன் இவள் மீது காமுற்று வந்தனன். அவனைத் தன் பாதிவ்ருத்யத்தால் சபித்து நீறாக்கினள்.

அதன்பிறகு அவ்வழியிற்சென்ற சில ஜனங்களைத் துணையாகக் கொண்டு ஓரிடத்தைச்சார்ந்து அவ்விடத்தில் இராப்பொழுதில் அவர்களோடு நித்திரை செய்தனள். அதுசமயம் சில காட்டானைகள் திரண்டு வந்து துயின்று கொண்டிருந்த கூட்டத்தைக் கால்களால் நசுக்கிக் கொன்றன. தமயந்தியின் புகைத்தில் வருதற்கு அஞ்சியோடின. இந்தச் சம்பவத்தைக்கண்ட தமயந்தி ஒருவகையான் தன் தகப்பன் நாட்டையடைந்தனள்.

இவள் இவ்வாறிருக்க நளன் கார்க்கோடகன் என்னும் பாம்பின் விஷத்தினால் தன் வடிவம் மாறினதுவேகாரணமாகத் தன்னைப் பிறரறியாமல் அயோத்திக்கரசனாகிய ருதுபர்ணனிடம் சாரதியாக அமர்ந்திருந்தனன். இவன் இங்ஙனமிருப்பதைத் தமயந்தி ஒருவகையானறிந்து அவனையடைவதற்காக ருதுபர்ணனிடம் செல்லுமாறு ஒரு பிராம்மணனையனுப்பினள். அவன் ருதுபர்ணனை நோக்கி 'காட்டில நளனைவிட்டுப் பிரிந்த தமயந்தி தன் தந்தையின் வீட்டையடைந்து பெரியாரது அநுக்ரஹம்பெற்று மறுமுறையும் ஸ்வயம் வரத்தை விரும்பினள்; நாளையதினமே ஸ்வயம்வரம் நடைபெறும்' என்றுரைத்தனன். இதனைக்கேட்டருதுபர்ணன் 'நெடுந்தூரமுள்ள விதர்ப்பதேசத்தை ஒரு தினத்திற் சென்றடைவதெப்படி' என்று திகைப்புற்றனன். இக்குறிப்பினையறிந்த நளன் 'இது தமயந்தி நம்மையடைதற்குச்செய்த சூழ்ச்சியாகும்' என்று தனக்குள் கருதி அரசனைநோக்கி 'அஞ்சவேண்டாம்' ஒரு தினத்தில் விதர்ப்பதேசங் கொண்டுபோய்ச சேர்க்கிறேன்; தேரில் ஆரோகணிப்பீர்; என்று ருதுபர்ணனை யழைத்துக்கொண்டு விதர்ப்பநாட்டை யடைகின்ற

போது ரதத்தின் ஆரவாரத்தைக்கேட்டுத் தமயந்தி தன்னாயகனே வருகின்றான் என்று நிச்சயித்தனள். ருதுபர்ணன் விதர்ப்பதேசத்தில் ஸ்வயம்வரத்திற்குரிய குறிகளொன்றும் நிகழாதிருப்பதைக் கண்டு மயங்கினான். நளன் தன்னுருமாறியிருப்பதைத் தமயந்தி சில சூழ்ச்சிகளாலறிய, நளனும் தன்னுண்மை வடிவைப்பெற இருவருங்கூடித் தம நாட்டையடைந்து வாழ்ந்திருந்தார்களென்பது இச் சரித்திரத்தின் ஸாரம்.

இனி, திரௌபதிக்கும், தமயந்திக்குமுள்ள தாரதம்யம் ஆராயலாகும். முன்பு தமயந்தியானவள் 'எனக்குப் பாதிவ்ருத்யத்தில் ஊக்கமிருப்பது உண்மையானால் நளனுக்கும் தேவர்கட்குமுள்ள வாசி தெரியவேண்டும்' என்று சபதம் செய்த காலத்தில, இவளை ஏமாற்றியடையவேண்டுமென்ற எண்ணங்கொண்ட தேவர்களும் தம்மைத்தாமே இவ்வாறிருக்கிறோம் என்றறியாத நிலைமையில் இவளுக்கு அவர்கள் இன்னார்களென்று தெரிந்துகொள்ளும் நிலை நேர்ந்தது. மேலும் காட்டில இவள் தனியிடத்தில் அலைந்து திரிந்துகொண்டிருந்தபோது இவள் மீது தாபபுத்திகொண்ட வேடன் சாம்பலானான். இவளுடன் கூடி நின்ற கூட்டத்தை அழித்த காட்டானைகள் இவளைக்கண்டு நடுங்கி ஓடின. இப்படி இவளுக்குநேர்ந்த ஆபத்துக்காலங்களில் இவளைக்காப்பாற்றியது பாதிவ்ருத்யமேயாம்.

திரௌபதிக்குத் தமயந்தியைக் காட்டிலும் ஆபத்து விஞ்சியிருக்க அவ்வாபத்துக்களில் அப்படிப்பட்ட ரக்ஷை நேரவில்லை. துச்சாஸனன் அநீதியாக ரஜஸ்வலையாயிருந்த இவளை மயிர் பிடித்திழுத்து வீதியின் வழியாகக் கொணர்ந்து ஸபையில் நிறுத்தி வஸ்திராபஹரணஞ் செய்தகாலத்தில இவள் வாய்விட்டலறித் தன்னாயகர்களும் பல பெரியார்களும பார்த்திருக்கப பரிபவப்பட்டாள். தன்னுடன் தொடர்ந்து வந்தவேடனைத் தமயந்தி சபித்ததுபோலத் திரௌபதி துச்சாஸனைச் சபிக்காதொழிந்தமைக்குக் காரணம் ஆராயவேண்டும். மைந்துனன் என்று பயங்கினளென்றும் மாமனாருக்குப்பயந்து வாளாவிருந்தாளென்றுஞ் சொல்லவொண்ணாது. தன் தவநிலைக்குக்குறைவுண்டாகுமென்று கூசினளென்று சொல்வதற்குமிடமில்லை. "பிராட்டி ஸ்வசக்தியைவிட்டாள்; த்ரௌபதி

லஜ்ஜையை விட்டாள்'' என்று லோகதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீஸூக்திக்கு வியாக்யானஞ்செய்தருளிய மணவாளமாமுனிகள் பிராட்டி ஸ்வரூபஜ்ஞான பூர்த்தியுள்ளவளாகையாலே ராவணனை ''பஸ்மீபவ'' என்று சொல்லி அவனைச் சாம்பலாக்கச்செய்ய வல்ல சக்தியிருக்கவும் இதைவிட்டுத் தான் பங்கத்தை அநுபவித்தாள். திரௌபதிக்கு அவ்வளவு சக்தியில்லாமையாலே மஹாசபையில் வஸ்திராபஹாரஞ்செய்கின்றபோது லஜ்ஜையை விட்டாள் என்ற கருத்துப் பட அருளிச்செய்தார். இதனால் திரௌபதிக்குச் சக்தியிருக்குமாகில துச்சாஸனனை அவசியம் சபித்திருப்பாள். அஃதில்லாமையினாலே சும்மாவிருந்தாளென்றே கொள்ளவேண்டும். இதனால் தமயந்திக்குப் பாதிவ்ருத்யத்தில் அத்யவஸாயம் அதிகரித்திருந்ததெனவும், திரௌபதிக்கு அவ்வளவில்லையெனவும் தெரியவாகின்றன.

தொடரும்.

ஸ்ரீ:

ஆசார்யாபிமானம்.

ஆசார்யாபிமானம் என்பது கர்மம் ஞானம் பக்தி ப்ரபத்தி ஆசார்யாபிமானம் என்னும் மோக்ஷோபாயம் ஐந்தனுள் மிகவும் சிறந்தது. இது, ஆசார்யனையே மோக்ஷத்திற்கு உபாயமாகப்பற்றி அவருடைய திருவுளத்திற்கு விஷயமாயிருக்கை.

கண்ணபிரான் கீதையில் கர்மம் ஞானம் பக்தி ப்ரபத்தி என்னும் மோக்ஷோபாயம் நான்காக நிரூபித்திருக்க லோகதேசிகன் அருளிச்செய்த அர்த்தபஞ்சகத்தில் முன்கூறிய நான்குபாயத்துடன் ஆசார்யாபிமானத்தையுஞ் சேர்த்து உபாயம் ஐந்தாக நிரூபித்ததற்குக் காரணம் யாதெனின்; ப்ரபத்தியின் அவஸ்தாவிசேஷமே (நிலையின் வேறுபாடே) ஆசார்யாபிமானமாவதால் பூர்வாவஸ்தை ப்ரபத்தி என்றும், உத்தராவஸ்தை ஆசார்யாபிமானம் என்றும் பெயர் பெறும். இதனால் கண்ணபிரான் அருளிச்செய்த ப்ரபத்தியாகிய உபாயத்தையே இரண்டு பிரிவாக்கி உபாயம்

ஜந்தாக அருளிச்செய்தாரென்று ஏற்படுகிறது. எங்ஙனம் கர்மம் ஞானம் பக்திகளைக்காட்டிலும் ப்ரபத்தியானது சிறந்த உபாயமோ அங்ஙனமே பூர்வாவஸ்தையாகிய ப்ரபத்தியைக்காட்டிலும் உத்தராவஸ்தையாகிய ஆசார்யாபிமானம் மிகவும் சிறந்த உபாயமென்பது இவ்விடத்தில் நிரூபிக்கப்படுகிறது. அது வருமாறு.—

கர்மம் ஞானம் பக்தி என்கிற மூன்று உபாயங்களும் உத்பத்தி காலத்தில் சேதனனையும், கார்யகாலத்தில் ஈசுவரனையும் அபேக்ஷிக்கும். அஃதாவது சேதனனது முயற்சியாலுண்டாகி மோக்ஷமாகிய கார்யத்தையுண்டாக்குமிடத்தில் தான் அசேதனமானதால் ஈசுவரனை அபேக்ஷிக்குமென்றவாறு. ஈசுவரனை அபேக்ஷித்தலாவது தானே கொடுக்கச் சக்தியற்று ஈசுவரனைக் கொடுக்கச்செய்தல்.

இந்தத் தோஷம் ப்ரபத்தியாகிய உபாயத்திலில்லை. ஏனென்றால் பரபத்தியாவது ஈசுவரனையே உபாயமாகப்பற்றுதல். இதனால் ஈசுவரனே மோக்ஷத்திற்குக் காரணமென்பது பெறப்படுகிறது. காரணமாகிய ஈசுவரன் நித்யமாதலாலும் நித்யவஸ்துவுக்கு உத்பத்தியின்மையாலும் அவ்வீசுவரனது உத்பத்தியில் சேதனனுடைய முயற்சியை அபேக்ஷிப்பதில்லை.

அவ்வீசுவரன் ஜ்ஞானசக்தியுடையவனாதலால் மோக்ஷமாகிய காரியத்தைச செய்யுமிடத்து மற்றொருவனை யபேக்ஷிக்கின்றதுமில்லை. இதனால் ப்ரபத்தியாகிய உபாயத்தில் உத்பத்தி கார்யகால இதர சாபேக்ஷத்வமாகிய இரண்டு தோஷங்களுமில்லையென்பது பெறப்பட்டது. இக்காரணம்பற்றியே கண்ணன் கீதையில அருளிச்செய்த கர்ம ஜ்ஞான பக்தி ப்ரபத்தியாகிய உபாயம் நான்கனுள் இது சரமோபாயமென்னும் பெயர் பெற்றது.

இன்னும் இதில் முற்கூறிய தோஷங்களில்லாததோடு அவிளம்ப பல ப்ரதத்வம், ஸ்வரூபோசிதத்வம், பல விசிஷ்டத்வ முதலிய குணங்களுமிருக்கின்றன. அவிளம்ப பல ப்ரதத்வமாவது—தாமதமின்றி மோக்ஷத்தைக்கொடுக்குந் தன்மை. ஸ்வரூபோசித்வமாவது—ஈசுவரனுக்கு அத்யந்தபரதந்த்ரமான ஆத்மாவின்சேஷத்வரூபமான ஸ்வரூபத்திற்குப் பொருந்தினதாயிருக்குந் தன்மை. பல விசிஷ்டத்வமாவது அவசியம் மோக்ஷத்தைக்கொடுக்குந் தன்மை.

இக்குணங்கள் கர்ம ஜ்ஞாந பக்திகளிலில்லை. எதனாலென்றால் கர்மாதி உபாயங்கள் தாம் பூர்த்தியடையுங்காலத்தையும், பூர்த்தியடைந்தாலும் ப்ராரப்த கர்மத்தின் முடிவையும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால் அவிளம்ப பலப்ரதத்வமில்லை. எங்ஙனம் சரீரமானது ஆத்மாவிற்கு முற்றும் பரதந்த்ரமாயிருப்பதால் தன் ரக்ஷணத்தின் பொருட்டு யாதொரு முயற்சியும் செய்வதில்லையோ அங்ஙனமே ஈச்வரனுக்கு ஆத்மாவானது முற்றும் பரதந்த்ரமாயிருப்பதால் தன் ரக்ஷணத்தின் பொருட்டு யாதொரு முயற்சியும் செய்யாதிருத்தலே ஆத்மாவின் ஸ்வரூபமாம். கர்மாதி உபாயங்கள் ஆத்ம ஸ்வரூப விரோதமாயும் ஸ்வரக்ஷண ஹேதுவாயுமிருக்கின்ற சேதன முயற்சி ஸாத்யமாவதால் இவற்றில ஸ்வரூபோஜிதத்வமில்லை. கர்மாதி உபாயங்கள் ஊழ் முதலிய ப்ரதிபந்தங்களால் தடுக்கப்பட்டுப் பூர்த்தியடையாதவிடத்து மோக்ஷமாகிய கார்யத்தையுண்டாக்காமையால் அவசியம் கார்யத்தையுண்டாக்குதலாகிய பல விசிஷ்டத்வமில்லை.

இதுவரையும் கர்ம ஜ்ஞாந பக்திகளைக்காட்டிலும் ப்ரபத்தியாகிய உபாயத்திற்குள்ள விலக்ஷணத்தன்மை கூறப்பட்டது இனி, இந்த ப்ரபத்தியின் லக்ஷணங் கூறப்படுகிறது.

பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ப்ரபத்தி. அஃதாவது சேதனனுடைய ரக்ஷண ஹேதுவான ஈச்வரனுடைய முயற்சியைத் தடுக்கும் சேதனனுடைய ஸ்வரக்ஷண ஹேதுவான முயற்சியாதோ அம் முயற்சியை விடுதலே பரபத்தியாம். ஸ்வப்ரவிருத்தி நிவருத்தி பரபத்தி என்னும் இம்மாத்திரமே பரபத்தியின் லக்ஷணமாகக்கூறின் பகவதநுபவப்ரீதி காரியமாயும், ஸ்வயம் பிரயோஜனமாயுமிருக்கின்ற பகவத் கைங்கர்ய நிஷ்டர்களிடத்தில ப்ரபத்தியின் லக்ஷணத்திற்கு அவ்யாப்தியுண்டாம். எதனாலென்றால் பகவத் கைங்கர்ய நிஷ்டர்களான ப்ரபந்நர்களிடத்தில் கைங்கர்யரூபமான ஸ்வப்ரவிருத்தியிருப்பதால் ஸ்வபரவிருத்தி நிவிருத்தியிலலை. இந்த அவ்யாப்தி தோஷத்தை நிவர்த்திக்கும் பொருட்டு ஸ்வப்ரவிருத்திக்குப் பகவத் ப்ரவிருத்தி விரோதி என்னும் விசேஷணங் கூறப்பட்டது. பகவத் கைங்கர்யம் ஸ்வப்ரவ்ருத்திரூபமா

யினும் அது பகவத் ப்ரவிருத்தி விரோதியன்று. அஃதாவது பகவத் கைங்கர்யம் சேதனனுடைய முயற்சியாயினும் பல சாதனமாகாமல் பலரூபமாதலால் அம்முயற்சி சேதனனுடைய ரக்ஷணஹேதுவான ஈச்வரனுடைய முயற்சியைத் தடுப்பதின்றும். இதனால் பகவத் கைங்கர்ய நிஷ்டரிடத்தில ஸ்வப்ரவிருத்தியிருப்பினும் பகவத் ப்ரவிருத்தி விரோதியான ஸ்வப்ரவிருத்தியின்மையால் ப்ரபத்தியின் லக்ஷணத்திற்கு அவ்யாப்தியில்லை.

இனி, இந்த ப்ரபத்தியே ஐந்தாவது உபாயமாகிய ஆசார்யாபிமானமென்னும் பெயரையுமடைகின்றது. அது வருமாறு,— இந்த ப்ரபத்தியானது எவ்வதிகரணத்தில் * ஸமவாயஸம்பந்தத்தாலிருந்துகொண்டு அவ்வதிகரணத்தில் மோக்ஷமாகிய காரியத்தை யுண்டாக்குகின்றதோ அப்பொழுது ப்ரபத்தி யென்னும் பெயரையடைகின்றது. அஃதாவது ஆசார்யன் ஆத்மாவில் ப்ரபத்தி ஜ்ஞானஸ்வரூபமாவதால் ஸமவாயஸம்பந்தத்தாலிருந்துகொண்டு மோக்ஷமாகிய காரியத்தையுண்டாக்குகின்றது. அப்போது அது ப்ரபத்தியென்னும் பெயரையடைகின்றது. இவ்விடத்தில § காரணதாவச்சேதகஸம்பந்தம் ஸமவாயம. எவ்வதிகரணத்தில ப்ரபத்தியானது ஸ்வாச்ரயாபிமான விஷயத்வ ஸம்பந்தத்தாலிருந்துகொண்டு கார்யோத்பத்தியைச் செய்கின்றதோ அப்போது அது ஆசார்யாபிமானமென்னும் பெயரையடைகின்றது. அஃதாவது சிஷ்யனது ஆத்மாவில் ப்ரபத்தியானது ஸ்வாச்ரயாபிமான விஷயத்வரூப பரம்பரைச சம்பந்தத்தாலிருந்துகொண்டு மோக்ஷமாகிய காரியத்தையுண்டாக்குகின்றது. அப்போது அது ஆசார்யாபிமானமென்னும் பெயரை யடைகின்றது. இவ்விடத்தில் காரணதாவச்சேதக ஸம்பந்தம் ஸ்வாச்ரயாபிமான விஷயத்வம். இச்சம்பந்தத்தின் பேதத்தினால் ப்ரபத்தியொன்றே ப்ரபத்தியென்றும், ஆசார்யாபிமானமென்றும இரண்டு பெயரை யடைகின்றது. ஸ்வ

---

* ஸமவாயஸம்பந்தம் என்பதனை நமது ஸித்தாந்தத்தில் அப்ருதக்ஸித்த ஸம்பந்தமென்று வழங்குவர். அஃதாவது ஒற்றுமைச சம்பந்தமாம்.

§ காரியத்தின் அதிகரணத்தில் எச்சம்பந்தத்தால் காரணமிருக்குமோ அச்சம்பந்தம் காரணதாவச்சேதக ஸம்பந்தமெனப்படும்.

பதத்திற்கு ப்ரபத்தியும், ஆசிரயபதத்திற்கு அப்பிரபத்தியின் அதிகரணமாகிய ஆசார்யனும், அபிமான பதத்திற்கு அவ்வாசார்ய னிடத்திலுண்டாகும் பிரீதிரூபமான ஞானமும், விஷயபதத்திற்கு அந்த ஞானத்தின் விஷயமும் அர்த்தமாதலின் ப்ரபத்தியானது தனக்கு அதிகரணமான ஆசார்யனிடத்திலுண்டாகும் பிரீதிரூப மான ஞானத்தின் விஷயத்வ ஸம்பந்தத்தால் சிஷ்யனது ஆத்மாவி லிருந்துகொண்டு மோக்ஷமாகிய கார்யத்தை யுண்டாக்குகின்றது என்று தாத்பர்யம்.

இனி, ப்ரபத்தியாவது ஸ்வதந்த்ரமான ஈசுவரனை உபாய மாகப் பற்றுவது. ஆசார்யாபிமானமாவது பரதந்த்ரனை ஆசார் யனை உபாயமாகப பற்றுவது. ஈசுவரனை உபாயமாகப்பற்றுகின்ற வர்கட்கு மோக்ஷமாகிய காரியத்தைக்குறித்து ஈசுவரன் கரணமும், ஈசுவரனது கிருபை வியாபாரமுமாம். எங்ஙனம் இந்திரியமாகிய கரணமுள்ளவிடத்திலும் இந்திரியவிஷய ஸம்பந்தமாகிய வியாபார மில்லாதவிடத்தில் பிரத்யக்ஷஜ்ஞானமாகிய கார்யமுண்டாவதின்றோ அங்ஙனமே ஈசுவரனாகிய கரணமுள்ளவிடத்தும் ஈசுவரனதுகிருபை யாகிய வியாபாரம் அவனது ஸ்வாதந்தர்யத்தால் தடுக்கப்பட்ட விடத்து மோக்ஷமாகியகாரியமுண்டாவதில்லை. இதனால் வியாபாரத் தினுத்பத்தியில் பரதிபந்தகமுண்டென்பது கருத்து. ப்ரபத்திக்கு, கர்ம ஜ்ஞான பக்திகளுக்குள்ள தோஷங்களில்லாவிட்டாலும் ப்ரதி பந்தகவிசிஷ்ட வியாபாரவத்வமாகிய தோஷமிருப்பதால் இப்பிர பத்தியைக்காட்டிலும் எவ்விதமான தோஷமுமில்லாத ஆசார்யாபி மானமே மிகவும் சிறந்த உபாயமாம். ஆசார்யனை உபாயமாகப் பற்றுகின்றவர்கட்கு ஆசார்யன் கரணமும், ஆசார்யனது கிருபை வியாபாரமுமாதலில் ஆசார்யனிடத்தில் ஸ்வாதந்தர்யமின்மையால் ப்ரதிபந்தகவிசிஷ்ட வியாபாரவத்வமாகிய தோஷமில்லை.

இவ்வர்த்தத்தைப பிள்ளைலோகாசார்யர் "ஈசுவரனைப்பற்றுவது கையைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி, ஆசார்யனைப் பற்று வது காலைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி" என்று அருளிச் செய்திருக்கின்றனர். இதன் தாத்பர்யம்.— ஈசுவரனைப்பற்றினால் தவறினும் தவறும். ஆசார்யனைப்பற்றினால் தவறுதென்பதாம்.

இத்திருஷ்டாந்தத்தால் மற்றோர் அர்த்தமும் கிடைக்கின்றது. அஃதாவது.— மிகுந்த யோக்யதையுடையவனே கையைப்பிடித்துக் கார்யங்கொள்ளுதற்குரியவனென்பதும், அவ்வித யோக்யதையில்லாதவன் காலைப்பிடித்துக் கார்யங்கொள்ளுதற்குரியவனென்பதும் லோக ப்ரஸித்தமாகையால் ஈசுவரனைப்பற்றிக் கார்யங்கொள்ளுதற்கு மிகுந்த யோக்யதைவேண்டுமென்பதும், அவ்விதயோக்யதையில்லாத நம்மனோர்களெல்லாம் ஆசார்யனைப்பற்றித்தான் கார்யங்கொள்ளவேண்டுமென்பதும் கிடைக்கின்றன.

இனி, ப்ரபத்தியானது எல்லோருக்கும் உண்டென்பாரும் உளர். அது வருமாறு.— ப்ரபத்தியின் அநுஷ்டானத்தை ப்ரதிபாதிப்பதாகிய தவயத்தை உச்சரிப்பதால் வாசிகமான ப்ரபத்தியும், அர்த்தஸ்மரணத்தால் மானசிகமான ப்ரபத்தியும், பகவத் ஸந்நிதியில் தீர்க்கதண்டம் ஸமர்ப்பிப்பதால் காயிகமான ப்ரபத்தியும் ஆக வாசிக, மானசிக, காயிகமான மூவித ப்ரபத்திகளும் எல்லாருக்குமுண்டென்பது அவர்கள் கருதது. இதை விரிக்கிற் பெருகும். சுருக்கமாய்க் கூறுமிடத்தில் ப்ரபத்திககு அதிகாரி நியமமில்லையென்று அருளிச்செய்திருந்தாலும் மஹாவிசுவாச முதலிய அதிகாரத்தை நாம் அவசியம் அங்கிகரிக்கத்தான் வேண்டும். விசுவாசமில்லாதவிடத்து *சனல் கயிறு கண்ட பிர்ம்மாஸ்திரம்போல ப்ரபத்தி நழுவி விடும். இந்த மஹாவிசுவாசமுண்டாக வேண்டுமானால் ஈசுவரனால மயர்வறமதிநலமருளப்பெற்று அதனால் பகவத் ப்ரபாவங்களை முழுவதும் ஸாக்ஷாத்தாகக்கண்டு அநுபவித்த பெரியோர்கட்குண்டாகுமேயொழிய நம்மனோர்கட்குண்டாவது அரிது.

---

* "சரணாகதிமற்றோர் சாதனத்தைப்பற்றில்
அரணாகாவஞ்சனேதன்சேயை—முரணழிய
கட்டியதுவேறோர்கயிறுகொண்டார்ப்பதன்முன்
விட்டபடைபோல்விடும்" (ஞானசாரம்)

இப்பாட்டால் சரணாகதியானது மற்றோர் சாதனததைப் பற்றினால் பாதுகாவலாகாதென்பதற்கு ஒரு வரலாறுரைக்கப்பெற்றுளது. அதுவருமாறு.— இந்திரஜித்து அநுமானைப்பிர்ம்மாஸ்திரத்தாற்கட்டியபோது சில ராக்ஷஸர்கள் அந்த பிர்ம்மாஸ்திரத்தில் விசுவாசமில்லாமல் அதனோடு கயிற்றையும் கொண்டு கட்டிவிட்டால் இக்குரங்கு கட்டவிழ்க்க வொண்ணாமல் கட்டுண்

ஆனால் ப்ரபத்தி செய்வதற்குரிய யோக்யதை நமக்கில்லாவிட்டால் ஆசார்யனிடத்திலுள்ள ப்ரபத்திதான் நமக்கு எவ்விதம் கார்யஞ்செய்யுமென்றால்? தான் நேரே ஆசிரயித்திருப்பதற்குரிய யோக்யதையை அபேக்ஷிக்கின்றதேயொழிய கார்யத்தைச் செய்வதற்குரிய யோக்யதையை அபேக்ஷிக்கின்றதில்லை. எங்ஙனம் அக்கினியானது தனக்குப்பிரதிபந்தகமான ஜலத்தை நேரே ஆசிரயித்திருப்பதில்லையென்றாலும், தனது சம்பந்தமுடைய பதார்த்தத்தைப் பிரகாசிக்கச்செய்தலாகிய தனது காரியத்தை அந்த ஜலத்திலும் செய்கின்றதோ அங்ஙனமே ப்ரபத்தியும் யோக்யதையில்லாதவிடத்தை நேரே ஆசிரயித்திருப்பதில்லையென்றாலும் தனது ஸம்பந்தமுடைய வஸ்துவிற்கு மோக்ஷத்தைக் கொடுத்தலாகிய தனது காரியத்தை அந்த யோக்யதையில்லாதவிடத்திலுஞ் செய்கின்றது. ஸாக்ஷாத் ஸம்பந்தத்திற்கு யோக்யதையை அபேக்ஷிக்கின்றதேயொழிய பரம்பரைச் சம்பந்தத்திற்கு யோக்யதையை ; அபேக்ஷிப்பதில்லை என்பது இதன் கருத்து.

இது கருதியே எம்பெருமானார் நம்மனோர்களும் பகவத்விஷயத்தை இழக்காமற் பெறுகைக்காக நமக்கெல்லாம் சேர்த்து

டிருக்குமென்ற கருத்தால் கட்டினார்கள். அப்பொழுது பிர்ம்மாஸ்திரம் தன்னிடத்தில் இவர்கட்கு விசுவாசமில்லையென்று நாணமுற்றுத் தன்னடையே விட்டகன்றது. அங்ஙனமே ப்ரபத்திக்கு விஷயமான ஈசுவரனும் தன்னிடத்தில் விசுவாசமின்றிப் பிறிதோருபாயத்தைப் பற்றினால் கைவிட்டுவிடுவானென்பதாம். இவ்வரலாறு ஸனத்குமாரஸம்ஹிதையிற்கண்டது என்று மணவாளமாமுனிகள் அருளிச்செய்வர். இங்கு ப்ரபத்தியானது பிறிதோருபாயத்தைப்பற்றினால் நழுவிவிடுமென்று சொல்லப்பட்டதேயன்றி மஹாவிசுவாசமில்லாவிடில் நழுவிவிடுமென்று சொல்லவில்லையேயென்னில்; "மற்றோர் சாதனத்தைப்பற்றில்" என்பதற்கு "தன்னோடவிதனான சேதனன் தன் வைபவத்தையறிந்து இதுவே நமக்கு ரக்ஷகமென்று விசுவசித்து நிற்கையன்றிக்கே, இதுக்குத்துணையாக நாமும் சில செய்வோமென்று ஸ்வயத்னரூபோபாயங்களில் ஒன்றை அவலம்பிக்கில்" என்று வியாக்யானஞ்செய்யப்பட்டது. இவ்விடத்தில் 'இதுவே நமக்கு ரக்ஷகமென்று விசுவசித்திருக்கையன்றிக்கே என்று குறிப்பிடப்பெற்றுள்ளதினால் ப்ரபதிக்கு மஹாவிசுவாசம் வேண்டுமென்பது பெறப்படும். பிறிதொருசாதனத்தைப் பற்றுதற்கு மஹாவிசுவாசமில்லாமையே காரணமாகையால் மஹாவிசுவாசம் வேண்டுமென்பதற்கு இப்பாட்டு உதாரணமாக எடுக்கப்பட்டது.

நம்பெருமாள் ஸந்நிதியில் இருவருமான சேர்த்தியில் ப்ரபத்தி செய்திருக்கின்றார். ஆகையால் ப்ரபத்தி செய்வதற்குரிய யோக்யதை நமக்கில்லாமையாலும் எம்பெருமானார் நமக்காக ப்ரபத்தி செய்திருப்பதாலும் நாம் தனித்து ப்ரபத்தி செய்யவேண்டியதில்லை. எம்பெருமானாருடைய ஸம்பந்தத்தைப்பெற்று அவரிடத்திற் பக்தி பூண்டொழுகுதலே நமக்கு மோக்ஷ ஹேதுவாகும்.

இராகவராமாநுஜ தாஸர்,
மதுரை.

ஸ்ரீ:

அன்னதோஷம்.

ஒப்புயர்வற்ற பரப்பிர்ம்மத்தையடைதலினும் சிறந்த பிரயோஜனம் பிறிதொன்றில்லையென்பதைக் கற்றுவல்ல பெரியோர்கள் நிராக்ஷேபணையின்றி ஒப்புக்கொள்வர்கள். இந்தப் பரப்பிர்ம்மத்தை யடைதற்கு உபாயம் யாதென்று வேதாந்தங்கள் ஆராய்ச்சி செய்துகொண்டுபோந்து முடிவாக ‡ த்ருவாநுஸ்மிருதியே ஸாதனமாகுமென்று தீர்மானித்தன. இந்த த்ருவாநுஸ்மிருதியை உபாஸநம் வேதநம் பக்தி என்ற சொற்களாலும் வழங்குவர்கள். கண்ணன் கீதையிலும் அர்ஜுனனை நோக்கி உபதேசித்துவருகிற காலத்தில் தன்னையடைதற்கு * அநந்யமான பக்தியே சாதனமாகு

‡ த்ருவாநுஸ்மிருதி-நிலைபெற்ற நினைவு. மற்றோர் ஞானத்தால், மறைக்கப்படாத ஸ்மிருதி ஸந்ததியைத் தான் ஈண்டு த்ருவாநுஸ்மிருதி என்று சொல்லப்பட்டது. ஆதலால் ஸ்மிருதி ஸந்ததிகளெல்லாம் க்ஷணிகமாயிருப்பதால் அதற்கு நிலைபேறுயாண்டையது? என்று ஆக்ஷேபிப்பதற்கிடமில்லை.

* 𑌨𑌾𑌹𑌂 𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌨𑌦𑌾𑌨𑍇𑌨 𑌨𑌚𑍇𑌜𑍍𑌯𑌯𑌾
𑌶𑌕𑍍𑌯 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍋 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌮𑌾𑌂𑌯𑌥𑌾 ॥
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯 𑌅𑌹𑌮𑍇𑌵𑌂𑌵𑌿𑌧𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।

மென்று அருளிச்செய்தான். இந்த த்ருவாநுஸ்மிருதி "ஆப்ர ணாத்தத்ராபிஹி த்ருஷ்டம்" "ஆப்ராணாத் தத்ராபிஹி த்ருஷ்டம்" (மரணம் வரை மோக்ஷஸாதனமான உபாஸநம் அநுவர்த்திக்க தக்கது.) என்று சொல்லப்பட்டுளது.

எக்காரியத்திலாவது ஒருவனுக்கு முயற்சியுண்டாகவேண்டு மானால் 'இக்காரியத்தால் இன்னபிரயோஜனமுண்டாம்' என்ற இச்சையில்லாதபோது அக்காரியத்தில் ப்ரவ்ருத்தியுண்டாவதில்லை. அதுபோல மரணம் வரையிலும் த்ருவாநுஸ்மிருதி நிகழவேண்டிய தென்றால் இந்த ப்ரவ்ருத்திக்குத் தகுதியான இச்சையுண்டாக வேண்டியதென்பது இன்றியமையாததொன்றும்.

இந்த இச்சாஸாதனம் யாது? என்று ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யத்தில் விசாரித்துவருகிறவிடத்தில் ஸத்கர்மாநுஷ்டானங்களும், ஸமாதியும் இந்த வேதனேச்சாசாதனங்களாகும் என்று தீர்மானித்தனர். இதனை வலியுறுத்துவதற்கு வாக்யகாரர் அருளியதையும் ஆண்டெடுத்து விளக்கியுள்ளார். வாக்யகாரர் த்ருவாநுஸ்மிருதிக்கு "விவேக விமோகாப்யாஸக்ரியா கல்யாணாநவஸாதாநுத்தர்ஷேப்ய:" "விவேக விமோகாப்யாஸக்ரியா கல்யாணாநவஸாதாநுத்தர்

ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப।
பருஷ: ஸ பர: பார்த்த பக்த்யா லப்யஸ்த்வநந்யயா ॥

நாஹம் வேதை: நதபஸா நதாநேந நசேஜ்யயா
சக்ய ஏவம் விதோத்ரஷ்டும் தருஷ்டவா நஸிமாம்யதா
பக்த்யாத்வநந்யயா சக்ய அஹமேவம் விதோர்ஜுந
ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ்ச தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப
புருஷஸ்ஸ பர: பார்த்த பகத்யா லப்யஸ்த்வநந்யயா.

(இ-ள்.) என்னை இப்பொழுது எவ்வாறு கண்டனேயோ அவ்வாறே நான் வேதங்களாலும், தபஸினாலும், தானத்தினாலும், யாகத்தினாலும் காண முடியாதவன். அர்ஜுநா! பகைவர்களைத் தபிக்கச் செய்பவனே! இங்ஙன மிருக்கின்ற என்னை உள்ளபடி அறிவதும் பார்ப்பதும் அடைவதும் அநந்ய மான பக்தியினால் மாத்திரம் கூடும். குந்தி புத்திரா! அந்தப் பரமபுருஷன் அநந்யமான பக்தியினால் அடையத்தக்கவன். ஏ-ம்.

ஷேப்ய:'' என்று * விவேகம் விமோகம் அப்யாஸம் கிரியை கல்யாணம் அநவஸாதம் அநுத்தர்ஷம் என்ற ஏழும் அங்கங்களாகுமென்று அருளிச்செய்தார்.

இவ்வேழங்கங்களுள் விவேகம் கிரியை என்ற இரண்டும் ஸத்கர்மாநுஷ்டானத்தையும், ஏனைய விமோகம் அப்யாஸம் கல்யாணம் அநவஸாதம் அநுத்தர்ஷம் என்ற ஐந்தும் மனத்தூய்மையையும் உணர்த்தும். இதனால் த்ருவாநுஸ்மிருதியின் இச்சைக்கு ஸத்கர்மாநுஷ்டானங்களும் மனத்தூய்மையும் காரணங்களாகுமென்பது பெறப்பட்டது.

இங்கு, ஸத்கர்மாநுஷ்டானமும் மனத்தூய்மையுமென்ற இரண்டுமே த்ருவாநுஸ்மிருதிக்குக் காரணங்களாகுமேயன்றி ஒரொன்றே காரணமாகமாட்டாதென்பதே முக்யமாயறியத்தக்க விஷயமாகும்.

மேலும், விவேகம் என்றதனால் தேகஶுத்தியைக் குறிப்பிடுகின்றாராதலால் ஸத்கர்மாநுஷ்டானத்திற்கு முதன்மையாக வேண்டற்பாலது தேகஶுத்தியாமென்பது வெளியாயிற்று. இத்தேகஶுத்தியும் அன்னஶுத்தியாலுண்டாகும். அன்னஶுதியால் ஸத்வகுணமும், ஸத்வகுணத்தால் த்ருவாநுஷ்மிருதியுமுண்டாகுமாதலால் ஸத்கர்மாநுஷ்டானத்திற்கு யோக்யதையுண்டுபண்ணித் தருவது அன்னஶுத்தியாமென்பது தெளிவன்றோ!

லோகதேசிகன் அருளிய "அர்த்தபஞ்சகம்" என்ற க்ரந்தத்தில் "சம்சாரியான சேதனனுக்குத் தத்வஜ்ஞானம் பிறந்து உஜ்ஜீ

* மூன்று தோஷமில்லாத அன்னத்தினாலுண்டாம் தேகஶுத்திக்கு விவேகமென்று பெயர். தேகஶுத்தியை விவேகமென்று சொல்லலாமோவென்னில் தோஷமில்லாத ஆஹாரவிவேசநத்திற்குப் பிரயோஜனமாயிருக்கிற காயசுத்தியில் விவேகமென்ற சொல்லுபசரிக்கப்பட்டதால் கூடுமென்க. விமோகம்-காமக்ரோதங்களின்மை. அப்யாஸம்-அடிக்கடி பழகுதல். (அநவரதபாவனை) கிரியை-யக்ய முதலியவற்றைச்செய்தல். கல்யாணம் என்பது ஸத்யம் நேர்மை தயை தானம் முதலிய நற்குணங்களுடைமை. அநவஸாதம்-சோக நிமித்தமான வஸ்து முதலியவைகளை நினைப்பதனாலுண்டாகும் மனக்கலக்கமின்மை. அநுத்தர்ஷம்-குதாகலமின்மை.

விக்குமபோது அர்த்தபஞ்சகஜ்ஞாநம் உண்டாகவேண்டும்'' என்று தொடங்கி, அர்த்தபஞ்சகம் இன்னின்னவென விளக்கிய பின்னர் ''அன்னதோஷம் ஜ்ஞாநவிரோதியாகக்கடவது''என்று அருளிச்செய்துள்ளார். இங்கு அர்த்தபஞ்சகங்களின் இயல்பெல்லாமெடுத்துரைத்ததன்மேல்''அன்னதோஷம் ஜ்ஞாநவிரோதியாகக்கடவது'' என்றுரைக்கபபெற்ற வாக்யம், பரகரணத்திற்குப் பொருத்தமில்லாதிருப்பதுபோலத் தோற்றுகிறது. இதனை ஆராயுமிடத்து, கார்யோத்பத்தியைக்குறித்து *பரதிபந்தகாபாவமும் காரணமாதலால் அர்த்தபஞ்சகஜ்ஞாநோத்பத்திக்கு அன்னதோஷம் தடையாமென்பதும், இத்தடையில்லாதவிடத்து அந்த ஜ்ஞாநமுண்டாகுமென்பதும் விளங்குகின்றன. ஆக, இவ்வாக்யம் அர்த்தபஞ்சகஞானத்தின் விரோதி இன்னதென்பதைத் தெரிவிக்கவந்ததாதலால் இது பிரகாணத்தோடு பொருத்தமுடையதே. இதனாலும் அன்னதோஷம் பிரபலமென்பது போதரும்.

மோக்ஷஸாதனமாகிய த்ருவாநுஸ்மிருதிக்கு அன்னதோஷம் தடையாயிருப்பதால் நம் பூர்வாசார்யர்கள் தொன்றுதொட்டு அன்னதோஷம் ப்ரபலவிரோதி என்று வற்புறுத்தி உபதேசித்துள்ளார்கள்.

அன்னத்திற்குதோஷம் மூன்று வகையான் உண்டாகின்றது. அவையாவன—ஜாதிதுஷ்டம் நிமித்ததுஷ்டம் ஆச்ரயதுஷ்டம் என்பன. அவற்றுள் ஜாதிதுஷ்டங்கள் வெங்காயம் வெள்ளப்பூண்டு முதலியன. நிமித்ததுஷ்டங்கள்—எச்சல் மயிர் முதலிய விரவப்பெற்றவை. ஆச்ரயதுஷ்டங்கள்—சண்டாளர் முதலானோர்களின் திரவியத்தால் வருமவை. மேலும், பகவத்பாகவத த்வேஷியர் காணவுண்டல், ஞானமில்லாதாரிடத்திலுண்டல, பகவந்நிவேதநமில்லாதவுணவையுண்டல், விலைச்சோறுண்டல், § மணசசோறுண்டல், ‡ பிணச்சோறுண்டல், சரீரவலிமைக்காகவுண்டல், பகவத்பாகவதசேஷமென்ற ப்ரதிபத்தியில்லாதுண்டல், பகவந்நிவேதநமான அன்னத்

---

* ப்ரதிபந்தகாபாவம்—தடையின் இன்மை.

§ மணச்சோறு—கல்யாணபந்தி போஜனம்.

‡ பிணச்சோறு-சிராத்தபந்தி போஜனம்.

தை ருசியில்லையென்றுண்டல், பகவந்நிவேதநமாகாத அன்னத்தை ருசியுள்ளதென்றுண்டல, களவாடியுண்டல், அநீதியாகக்கிடைத்த திரவியத்தைக்கொண்டுண்டல், ததியர் பசித்திருக்கவுண்டல், அநுகூலரை வருத்தியுண்டல, பிரதிகூலரையாசித்துண்டல், தன் விருப்பத்தையுரைத்து வாங்கியுண்டல், தேகதாரணமாத்திரமின்றி மிகுதியாகவுண்டல், மனம் சென்றவாறு கண்டபதார்த்தங்களைவாங்கியுண்டல், பிறரறியாரென்று நிஷித்தவஸ்துவைத் தனியிடத்துண்டல், தன்னிச்சைக்காக நிஷித்தவஸ்துவை பகவந்நிவேதனஞ்செய்துண்டல, பகவந்நிவேதனஞ்செய்துவிட்டால் நிஷித்த வஸ்துவின் தோஷம் பரிகாரமாகிவிடு மென்று இருமாப்புடனுண்டல் என்ற இவை முதலியவையெல்லாம் நிமித்ததுஷ்டங்களாம்.

இனி, அன்னதோஷம் ஞானவிரோதி என்பதை ஒரு வரலாற்று முகத்தான் விளக்கபபெறும். அது வருமாறு.—

உரோமபாதமஹாராஜர் ராஜ்யபரிபாலனஞ் செய்துவருகிற காலத்தில் அவர் நாட்டில் நீண்டகாலம் மழைபெய்யாதொழிய, அவர் இதற்கென்செய்வதென்று அறிவொழுக்கங்களிற் சிறந்த பெரியாரை வினவினர். அவர்கள் அருமதவப பெரியாராகிய கலைக்கோட்டுமாமுனிவர் இங்கு வருவரேல மழைபெய்து நாடு செழிப்புறுமென்றனர். உரோமபாதர்,

"ஓதநெடுங்கடலாடையுலகினில்வாழ்மனிதர்விலங்கெனவேயுன்னும்
கோதில்குணத்தருந்தவனைக்கொணருமவகையாதெனக்குனிக்கும்வேலை
சோதிநுதற்கருநெடுங்கட்டுவரிதழ்வாய்த்தரளநகைத்துணைமென்கொங்கை
மாதரெழுந்தியாமேகியருந்தவனைக்கொணர்துமெனவணக்கஞ்செய்தார்"

என்றபடி அவ்வருந்தவப்பெரியாரை ஈண்டு வரவழைப்பதற்குபாயம் யாதென்றுகருதிக்கொண்டிருந்தகாலத்தில சில பொதுமகளிர் எழுந்து நின்று யாங்கள் அப்பெரியாரைச சூழ்ச்சியால் அழைத்துக்கொண்டு வருகிறோம் என்றனர். உரோமபாதர் மகிழ்வுற்று அவர்கட்கு வேண்டிய பரிசளித்து சென்றுவருவீர் என்று நியமித்தனர். அவர்களும் இரதத்தின் மீதேறிச்சென்று கலைக்கோட்டுமாமுனிவர் ஆசிரமத்தின் சமீபத்தையடைந்து அம்முனிவரரைக் காண்பதற்கு முயன்று கொண்டிருந்தனர். கலைக்கோட்டு மாமுனிவர் தம் பிதாவாகிய விபண்டகருக்குப் பணிவிடைசெய்துகொண்டு

போது போக்கின்றவர் தெய்வவசத்தால் இப்பொழுது மகளிர் இருக்குமிடம் வந்தனர். அப்பொழுது இம்மாதர்கள் இன்னிசையுடன் பாடிக்கொண்டு முனிவரரையணுகி முனிவரரே! நீவிர் யாவர்? ஜனங்களில்லாத பயங்கரமான இக்காட்டில் எதற்காக வசிக்கின்றீர்? அருளிச்செய்யவேண்டுமென்று இன்மொழியுடன் வினவினர்.

கலைக்கோட்டுமாமுனிவர் பிறந்த நாள்முதல் நகரத்தில் வதியும் ஆடவர்களையும் பெண்டிர்களையும் மற்றுமுள்ளவைகளையும் பார்த்திராதவராதலால் அவர் அம்மகளிரையும் வடிவழகு படைத்த முனிவர்களாகவே கருதி அவர்களைநோக்கிச் சொல்லலுற்றார். முனிவர்களே! யான் விபண்டகருடைய புதல்வன்; என்னுடைய பெயர் கலைக்கோட்டுமாமுனிவரென்பது. இதுநிற்க; என்னுடைய ஆச்ரமம் சமீபத்திலிருக்கிறது; அங்குவரவேண்டும்; சாஸ்திர விதிப்படி உங்கட்கு அதிதிபூஜை செய்கிறேனென்றனர். மாதர்களும் மகிழ்வுற்று அவருடன் சென்றனர். முனிவரர் அவர்களை அர்க்யபாத்யாதிகளால் உபசரித்து, காய்கனி கிழங்குகளைக்கொடுத்து உண்ணுமாறு வேண்டினர். அப்பொழுது மாதர்கள் முனிவரரைநோக்கி 'நீவிர் தந்தருளியவற்றையும் உண்கிறோம்; நாங்கள் உமக்குக் கொடுப்பவைகளை அங்கீகரித்தருளவேண்டும்' என்று அவரை ஆலிங்கனஞ் செய்து கொழுக்கட்டை முதலிய பலவகையான பக்ஷணங்களைக் கொடுத்து இவற்றை விரைவில் உண்டருள்வீர் என்று வேண்டினர். முனிவரரும் அவற்றையுண்டு 'நாம் இதுவரையும் அருந்தாத கனிகளன்றோ இவைகள்; மிகவும் இனிமையாக விருக்கின்றனவே' என்று களிப்புற்றனர். அதுசமயம அம்மாதர்கள் விபண்டகர் வருவரேல் நமது வஞ்சனையையறிந்து விடுவார் என்று அச்சமுற்று முனிவரரை நோக்கி 'நாங்கள் வ்ரதஞ் செய்யவேண்டும்' என்று அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தாம் முன்னிருந்த சூழலையடைந்தனர்.

பின்னர், முனிவரர் இவர்களது பிரிவைக்குறித்து மனக்கலக்கமுற்று ஓரிடத்திலிராமல் அலைந்து திரிந்துகொண்டு மறுநாள் அம்மாதர்களிருக்குமிடத்தை யணுகினர். இவரது வருகையைக்கண்ட அம்மாதர்கள் மனக்களிப்புற்று 'முனிவரரே! எங்களுடைய ஆச்ர

மத்திற்கு எழுந்தருளவேண்டும்; முன்பு நாங்கள் கொடுத்த கனி வர்க்கங்களைக் காட்டிலும் இனிமை வாய்ந்த கனிகளைக்கொடுத்து நன்றுயுபசரிக்கின்றோம்' என்று நயம்பட வுரைத்தனர். இவ்வின் னுரையைக்கேட்ட முனிவரர் அவர்களுடைய வேண்டுதலுக்கிசைந் தனர். மாதர்கள் முனிவரரை இரதத்திலேற்றி 'நாம் கருதிவந்த கார்யங் கைகூடப்பெற்றது' என்று மகிழ்ந்து உரோமபாதமஹா ராஜாவின் நகரைநோக்கிச் செல்லலுற்றனர். அப்பொழுது,

"வளநகர்முனிவரன்வருமுன்வானவன்
களனமர்கடுவெனக்கருகிவான்மிசைச்
சளசளவென மழைத்தாரைகான்றன
குளனொடுநதிகடங்குறைகடீரவே"

"பெரும்புனனதிகளுங்குளனும்பெட்பறக்
கரும்பொடுசெந்நெலுங்கவின்கொண்டோங்கிட
இரும்புயல்ககனமீதிடைவிடாதெழுந்
தரும்புனல்சொரிந்தபோதரசணாந்தனன்"

என்றபடி நாடு செழிக்க மழை பெய்வதைக்கண்ட உரோமபாதர் முனிவரா இவண் வந்துற்றனர் என்று மதித்து எதிர்கொண்டு சென்று அவரை வந்தனை வழிபாடுசெய்து தம்மரண்மனைக்கழைத் துவந்து ஆசனத்திலமர்ந்தனர். அதன்மேல் அரசன் முனிவரரை நோக்கிப பொதுமகளிரைக்கொண்டு தேவரீரை அழைத்து வந்த மைக்கு வெறுப்புறுமல் என்னுடைய புதல்வியாகிய சாந்தை என் பவளையும் தேவரீரே விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்று வேண்டினர். முனிவரரும் அதற்கிசைய உரோமபாதர் தம் புதல்வி யைச்சாஸ்திர விதிப்படி விவாஹஞ் செய்துகொடுத்தனர்.

இந்திரியஜயமும், ஞானதிருஷ்டியினுல் எல்லாவற்றையுமறியும் சக்தியுடையவராகிய கலைக்கோட்டுமாமுனிவர் பொதுமகளிர் கொ டுத்த பக்ஷணங்களையுண்டதோஷத்தால் மனமயங்கியலைந்து திரிந்து அம்மகளிரது சொற்கேட்டு உரோமபாதருடைய நகரணுகும்வரை யிலும் அவர்களது வஞ்சனையையுணராதிருந்தனரென்பது விளங்கு கிறதன்றே! இதனுல அன்னதோஷம் ஞானவிரோதியாமென்பது வெளியாயிற்று.

இனி அன்னஸுத்தியினால் ஞானமுண்டாகு மென்பதற்கு ஒரு வரலாறுரைக்கப்பெறும். அதுவருமாறு.—

நாதமுனிகள் தம் அந்திமதசையில் மணக்கால்நம்பிகளை நோக்கி, 'நம்மரபில் ஒருவர் தோன்றப்போகின்றார்; அவருக்கு எல்லா அர்த்தவிசேஷங்களையும் உபதேசிப்பீர் என்று அருளிச் செய்தனர். அவர் அருளிச்செய்தபடி நாதமுனிகளின் திருக்குமாரரான ஈசுவரமுனிகளுக்கு ஒரு புத்திரர் தோன்றினர். இவருடைய பெயர் யமுனைத்துறைவரென்பது. இவர் இளம்பிராயத்திலே ஆக்கியாழ்வான் என்ற ஒரு பெரிய வித்வானை வெற்றிகொண்டனராதலால் அரசன் இவருடைய அறிவுக்கு வியந்து தன்னரசுரிமையைப் பங்கிட்டுக் கொடுத்தனன். ராஜமஹிஷியும் மகிழ்ந்து ஆளவந்தாரென்ற பெயரைச சூட்டினாள். இவரும் அச்செல்வத்தைப்பெற்று வாழ்ந்துவருகிறகாலத்தில் மணக்கால்நம்பிகள் தமக்கு நாதமுனிகள் நியமித்த கடமையைச் செய்வதற்கு நினைத்து 'ராஜைசுவரியத்தை அநுபவித்துக்கொண்டிருந்த இவரை எப்படி வழிபபடுத்துவது' என்று தமக்குள் ஆராய்ந்து தூதுவளைக்கீரையைத் தினந்தோறுங் கொண்டுபோய் ஆளவந்தாருக்கு அடிசிற்றொண்டு புரிகின்றவரிடங் கொடுத்தனர். அவரும் அக்கீரையை பாகஞ்செய்து ஆளவந்தாருக்கு அமுதாகக் கொடுத்தனர்.

இவ்வாறு நிகழ்ந்து வருகிற காலத்தில் மணக்கால்நம்பிகள் இரண்டொருநாள் தூதுவளையைக் கொடுக்காதிருந்தனர். அப்பொழுது ஆளவந்தார் அடிசிற்றொண்டு புரிபவரை நோக்கி 'இன்று ஏன் தூதுவளை பாகஞ்செய்யவில்லை?' என்று வினவினர். அவர், 'தினந்தோறும் ஓர் முதியோர் கொணர்ந்து கொடுப்பார். இன்று யாதுகாரணமாகவோ அவர் வரவில்லை' என்றனர். ஆளவந்தார், 'இனி அந்த முதியோர் வருவரேல் அவரை நம்மிடத்திற்கு அழைத்து வருவீர்' என்று நியமித்தனர். அவரும் மணக்கால்நம்பிகளின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். மறுநாள் மணக்கால்நம்பிகள் தூதுவளையைக்கொடுக்கும்போது அடிசிற்றொண்டு புரிவார் இவரை ஆளவந்தார்பால் அழைத்துக்கொண்டு போய்விட்டனர். ஆளவந்தார் மணக்கால்நம்பிகளைநோக்கி நீவிர் யாது குறை

வேண்டி இக்கார்யத்தைச் செய்துவருகிறீர்; விரும்பியதைத் தருகிறேன் கேட்பீர்' என்றனர். மணக்கால்நம்பிகள் எனக்கு வேறு குறையொன்றுமில்லை; உம்முடைய பிதாமகர் சேமித்துவைத்தநிதி என்னிடத்திலிருக்கின்றது; அதனை உமக்குக் காட்டிக்கொடுக்க வேண்டுமென்ற அவாவுடையனாக இங்கு வந்தேன்' என்றார். அப்படியானால் அதனைக் காட்டியருளவேண்டுமென்று வேண்டினார்.

மணக்கால்நம்பிகள் அன்றுமுதல் ஆளவந்தாருக்குப் பகவத்கீதையின் அர்த்தவிசேஷங்களையுரைத்துச் சரமசுலோகார்த்தத்தையும உபதேசித்தனர். அப்பொழுது ஆளவந்தார் மிகவும் ஈடுபட்டு 'இந்தச் சரமசுலோகார்த்தத்தையருளிச்செய்த பரவஸ்துவை இப்பொழுது கண்ணால் காண்பதற்கு ஏதேனும் உபாயமுண்டோ?' என்று பணிந்து கேட்டனர். மணக்கால்நம்பிகள் அதற்கும் உபாயமுண்டு என்று ஆளவந்தாரை யழைத்துக்கொண்டு திருவரங்கச் செலவனாகிய பெரியபெருமாளைக்காட்டி 'இந்தப் பெருமானே உம்முடைய பூர்வர்கள் தேடிவைத்த மஹாநிதி' என்றனர். ஆளவந்தாரும் அந்தப்பெருமானுடைய கரியவாகிப்புடைபரந்து நீண்டு செவ்வரியோடிய அப்பெரியவாய கண்களில ஈடுபட்டுக் கண்ணீரருவி சோரநின்று ராஜைசுவரியத்தை யெல்லாந் துறந்தனர்.

பகவத்விஷய மின்னதென்றறியாமல் ஐசுவர்யமே பரமபுருஷார்த்தமென்று கருதியிருந்த ஆளவந்தாருக்கு ஸத்வநிஷ்டராகிய மணக்கால்நம்பிகள் தீண்டப்பெற்ற தூதுவளைக்கீரையன்றோ சிறந்த ஞானத்தைக் கொடுத்தது. இதனால் அன்னஸுத்தியினால் ஞானமுண்டாமென்பது தெளிவாயிற்று.

கண்ணபிரான் தூதுசென்றகாலத்தில் ஞானத்தாலும் ஜாதியினாலும் தனத்தாலும் சிறந்தவர்களாகக் கர்வமுற்றிருந்த பீஷ்மர் துரோணர் துரியோதனன் என்ற இவர்களின் கிருஹத்திற்குச் செல்லாமல் அஹங்காரம் சிறிதுமில்லாத விதுராழ்வான் திருமாளிகைக்குச்சென்று அமுது செய்தருளினான். இதனால் அஹங்காரமுடையாரின் ஸம்பந்தமுள்ள அன்னத்திற்கும் தோஷமுண்டென்பது புலனாம்.

மணவாளமாமுனிகள், மடத்துவாசலிற் கீரைவிற்றுச் செல்பவனை யழைத்து நீ யார்? இக்கீரை எவ்விடத்திலுண்டானது? யாரால் நீர் இறைக்கப்பட்டது? என்று வினவி, அக்கீரை நல்லோரின் ஸம்பந்தத்தாலுண்டுபண்ணப்படவில்லையென்பதறிந்து அதை யகற்றினரென்று சொல்லப்பட்டுளது.

மேலும், நம் பூர்வாசார்யர்கள் ஆஹாரவிஷயத்தில் மிகவுங் கருத்துடையவர்களாய், தோஷமற்றதியாதென்று ஆராய்ந்து அதனைப் பகவந்நிவேதனஞ்செய்து தேகதாரணமாத்திரமாக உட்கொண்டு தம் வாழ்நாளைக் கழித்தனர் என்பதைக் குருபரம்பராப்ரபாவம், விலக்ஷணமோக்ஷாதிகாரிநிர்ணயம் முதலிய க்ரந்தங்களில் விரிவாகக்காணலாம்.

இதுநிற்க; நீதி நூல் கூறலுற்றோர்களும்,

“தான்கெடினுந்தக்கார்கேடெண்ணற்கதன்னுடம்பின்
ஊன்கெடினுமுண்ணார்கைத்துண்ணற்க—வான்கரிந்த
வையகமெல்லாம்பெறினுமுரையற்க
பொய்யோடிடைமிடைந்தசொல்”

என்றும்,

“பெருக்குகநட்டாரைநன்றின்பாலுய்த்துத்
தருக்குகவொட்டாரைக்காலமறிந்தாங்கு
அருக்குகயார்மாட்டுமுண்டி
சுருக்குகசெல்லாவிடத்துசினம்”

என்றும்,

“கிடந்துண்ணார்நின்றுண்ணார்வெள்ளிடையுமுண்ணார்
சிறந்துமிகவுண்ணார்கட்டின்மேலுண்ணார்
இறந்தொன்றுந்தின்னற்கநின்று”

என்றும்,

“உண்ணுங்கால்நோக்குந்திசைகிழக்குக்கண்ணமர்ந்து
தூங்கான்துளங்காமைநன்கிரீஇயாண்டும்
பிறிதியாதும்நோக்கான்உரையான்தொழுதுகொண்டு
உண்கஉகாஅமைநன்கு”

என்றும் உரைத்துள்ளார்கள். இங்கு “உண்ணார்கைத்துண்ணற்க” “அருக்குகயார்மாட்டுமுண்டி” என்று உண்டிவிஷயத்தில் நிஷேத

விதியும், "உண்ணுங்கால்நோக்குந்திசைகிழக்குக்கண்ணமர்ந்து" என்பதனால் நியமமுங் கூறப்பட்டன. ஆக, ஆஹார நியமவிஷயம் யாவர்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாம்.

இத்துணையுங் கூறியவாற்றால் மோக்ஷோபாயமாகிய த்ருவாநுஸ்ம்ருதிக்கு முதன்மையாக வேண்டத்தக்க அங்கம் தேகஸுத்தியென்பதும், தேகஸுத்தியும் அன்னஸுத்தியாலுண்டாகுமென்பதும், அன்னத்திற்கு ஸுத்தியாவது மூன்றுதோஷமில்லாதிருத்தலென்பதும், இத்தோஷமே ஞானத்திற்குப் பெருந்தடையாயிருக்குமென்பதும், இதனால் பூர்வாசார்யர்கள் அன்னதோஷத்தை ஒழிப்பதற்கு ஆஹார நியதியைப் பெரிதும் கையாண்டு வந்தார்களென்பதும், நீதிநூலார்கட்கும் ஆஹார நியதி அவசியம் வேண்டுமென்பது உடன்பாடாமென்பதும் வெளியாயின.

ப. அ.

ஸ்ரீ:

ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்.

(184-ம் பக்கத்தொடர்ச்சி.)

௩-ம் பத்து.

௨-ம். திருவாய்மொழி—முன்னீர் ஞாலம்.

ப்ரவேசம்.

(29) ஜீயர்நாயனார் ஆழ்வார் ஸ்ரீகார்யாத்தமாகக் கோயிலுக்கெழுந்தருளினாராய் அவ்விடத்திலே விடிவே தொடங்கினால் ஆஸ்த

---

(29) பட்டர் திருக்கோஷ்டியூரில் எழுந்தருளியிருக்கும்போது சீராமப்பிள்ளை பட்டரைநோக்கி ஆழ்வார் இப்பொழுது பரத்வத்தை ஆசைப்பட்டு நோவுபடுகிறாரல்லர்; அவதாரங்களையனுபவிக்கவேண்டுமென்று 'காலங்கடந்துவிட்டதே' என்று நோவுபடுகிறாரில்லை; உகந்தருளிய நிலமாகிய திருமாலிருஞ்சோலை எம்பெருமானை அநுபவிக்க முற்பட்டார். இவர் அநுபவிக்கக் கோலியதற்கேற்ப. அநுபவித்துசசெல்லாமல் இவ்விடத்தில் வருத்தமுறுதற்குக்காரணமென்னை? அர்ச்சாவதாரத்தில் போக்ய முதலிய குணபூர்த்தி அவ்வளவில்லையென்ற கருத்தா? என்று வினவினர். அதற்குப்பட்டர், பரவ்யூக

மிப்பதுக்குள்ளே முடிப்பதான 'எழுஞாயிறு படுஞாயிறு' என்ற வியாதிவந்ததாய் அவ்வளவிலே தீர்த்த தாஹமாய் பற்கிட்டி வாய் திறக்கப்போகாமையாலே, 'என் வயிற்றைப் பிறித்தீர்த்தம் வார்ப்பாரில்லையோ' என்று ஆஸ்யம்பிஹிதமாய்த் துடித்தார்.

க-ம். பாட்டு—முன்னீர்.

(30) உபகோசலன் என்பானொருவன் நெடுநாளாக ஆசார்ய சுச்ரூஷணம் பண்ணினவிடத்திலும் ஆசார்யன் ஒன்றும் உபதேசியாமல் யத்ருச்யா ஓரிடத்திற்குப்போவானாக, இந்த உபகோசலனைத் தன்னுடைய அக்கினி சுச்ரூஷணம் பண்ணிக்கொண்டிருக்கச்சொல்லிப்போக, அவனுமப்படியே நோக்கிக்கொண்டிருந்து 'ஆசார்யன் அல்லாதார்க்கெல்லாம் ஞானோபதேசம் செய்கிறவன் நமக்குபதே

விபவங்களோடு, அர்ச்சாவதாரத்தோடு வாசியறதர்ம்யைக்யத்தாலே விஷயம் எங்கு மொக்கப் பூரணமாயிருக்கும். குறைந்து தோற்றுவது அன்பு செய்பவரின் அன்பின்குறைவே காரணமாகும். பெருவிடாய் கொண்டவன், தண்ணீரும் தன்னண்மையிலிருக்கக்கண்டு அதை எடுத்துப் பருகுதற்கு வாய்திறக்க முடியாத நிலைமையுண்டானபோது துடிப்பானன்றோ! அதுபோல இங்கு ஆழ்வார், கிட்டியிருக்கிற அழகருடைய அளவிட வொண்ணாத அழகினைக் கண்டு, 'இவ்வழகு முழுமையும் நம்மாலநுபவிக்க முடியவில்லையே' இதற்கு நமது கரணங்களில் குறைவே காரணமாகும் என்று வருந்துகிறார்' என்று விடையளித்தார். விடாய் கொண்டவன நீரைப்பருகி விடாயகற்றிக்கொள்வதற்கு முடியாமல் பற்கிட்டிவிட்டால் துடிதுடித்து வருந்துவானென்பதற்கு இவ்வரலாறு அரும்பதத்திற் குறிப்பிடப்பட்டுளது, கோயில்—ஸ்ரீரங்கம். எழுஞாயிறு—உதிக்கின்ற சூரியன். படுஞாயிறு—அஸ்தமிக்கின்றசூரியன். சூரியோதயத்திற்றொன்றி சூர்யாஸ்தமனத்திற்குள்ளாக உயிரைப்போக்கின்ற கொடிய ஜ்வரத்திற்கு எழுஞாயிறுபடுஞாயிறு என்று பெயர். ஆஸ்யம் பிஹிதமாய்—வாய் திறக்கமுடியாமல்.

(30) "வெந்நாள் நோய்வீய" என்பதில் நோய் என்பதற்கு ஈட்டில் பிறவி என்று பொருளுரைக்கப்பட்ட விடத்தில் இவ்வரலாறு அரும்பதத்திற் கூறப்பட்டுளது. அக்னிசுசரூஷணம்—நித்யாக்னிஹோத்ர சுசரூசனம். சுச்ரூஷணம—பணிவிடை. உபகோசல ப்ரஹ்மாசாரிந்—உபகோசபிர்ம்மசாரியே, அப்யவஹாரார்த்தம் ஆகச்ச—உணபதற்கு வருவாய்; என்று அழைத்தபோது உபகோசலர் ஜன்மத்தையும் அதடியாகவுண்டாகின்ற தாபத்ரயத்தையும் வியாதி என்ற சொல்லால் வழங்கினார். தாபதரயமாவன— தன்னால் வருவது பிறிதொன்றால் வருவது தெய்வத்தால் வருவது என்பனவாம்.

சித்தானில்லையே' என்று துக்கிதனாயிருக்கிறவளவிலே ஆசார்ய பத்தினியானவள் "உபகோசல ப்ரஹ்மசாரின் அப்யவஹாரார்த்த மாகச்ச" என்றழைக்க, அப்போது "வ்யாதிபி: பரிபூர்ணோஸ்மி" என்னான்.

௩௰ம். திருவாய்மொழி—ஒழிவில்காலம்.

ப்ரவேசம்.

(31) ஒரு பிராம்மணனை, ஒருவன் சிராத்தத்துக்குச் சொல்லுவதாகப்போய், அவனைக் கிருஹத்தில் காணாமையாலே அவனுடைய ஸ்திரீயிடத்தில் சொல்லி வைத்துப் போனான். அவளும் தன் பர்த்தாவிடத்தில் முன்பே சொலவதற்கு மறந்து போஜன வேளையிற் சொன்னாள். அவன் அந்த ஸ்திரீயை அதட்டி முன்பே சொல்லாமல போஜனவேளையில் சொல்லுகிறாய்; இனி மனோரதிக்க அவசரமெங்கே, புஜிக்க அவசரமெங்கே என்றானாம்.

தொடரும்.

ப. அ.

---

(31) ஆழ்வார் 'ஸர்வேசுவரன் என்னுடைய விரோதியாகிய பிரகிருதி ஸம்பந்தத்தையகற்றித் தன்னையநுபவிக்கும்படி செய்வதற்கு அநேக அவதாரங்களைசசெய்து அத்தராத்மாகவும் நின்றான்; அவற்றையெல்லாம் தப்பினேன்; இனி அவனைக் கிட்டிநின்று அநுபவிக்குமாறில்லை' என்று நசையற்று முடியப்புக, அப்பொழுது ஸர்வேசுவரன் ஆழ்வாரைநோக்கி ஆழ்வீர்! நாம உமக்காகவன்றோ திருமலையிலே வந்து நிற்கிறோம்; நீர்போய்க் காணக்கடவ காட்சியை நாம் இங்கேவந்து காட்டினோம்; இனி, உம்முடம்பு நம்மோடநுபவிப்பதற்குவிரோதியுமன்று; பரமபதத்திலிருககின்ற நித்யஸூரிகளும் வந்து அநுபவிககிறவிடம் இதுவாகும்; ஆதலால் நினைத்தபடியெல்லாம் இங்கே அநுபவிக்கக்கடவீர்' என்றனன. அப்பொழுது ஆழ்வார் 'இனி நாம் பரமபதத்திற்குசசென்று செயயக்கடவ அடிமைகளை இங்கேயிருந்து செய்வதற்கு வாய்ப்புற்றால் செய்வதற்கு யாது தடையுளது?' என்று பசியுமுணடாகி கையிற் சோறும் வைத்திருக்கிற ஒருவன் நீரும் நிழலுங்கண்டால் உண்ணப்பாரிக்குமாப்போலே இவரும் அடிமைசெய்யப்பாரிக்கிறார் என்றவிடத்திற்கு உதாரணமாக இவ்வரலாறு அரும்பதத்திற் குறிப்பிடப்பெற்றுளது. ப்ராஹ்மணன் மனோரதிப்பதற்கும், புஜிப்பதற்கு அவகாசமில்லா தொழிந்தமைக்குத்தான் தன் மனைவியை அதட்டினான். மனோரதித்தலாவது சிராத்தபோஜனத்திற்கு முன்பு பலவகையான பக்ஷணங்களையும் கேட்டு வாங்கிச சாப்பிடவேண்டும்; பருப்பு கலந்த அன்னத்தில் நெய்ததும்பும்படி விரவி உணணவேண்டும்; மதுரமானவைகளையும், வேறு ருசியுள்ளவைகளையும் மெதுவாக ருசிபார்ததுண்ணவேணடுமென்றுஅநுஸந்திப்பதாம். இதனை லக்ஷணத்யாயம்வாசித்தல் என்று வழங்குவர்கள். அதுபோலஆழ்வாரும் ஈசுவர விஷய கைங்கர்யங்களைப் பலவாறாகச செய்யவேண்டுமென்று பாரிக்கிறார்.